Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 333
புதன்கிழமை 25 ஒக்ரோபர் 2023
ஐப்பசி 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## தாதியரின் கட்டாய ஓய்வை இரத்துச்செய்தது நீதிமன்று


கொழும்பு, ஒக். 25
அரச தாதியர் சேவையில் தரம் நான்கைச் சேர்ந்த தாதியர்கள் 60 வயதில் கட்டாயமாக ஓய்வுபெற வேண்டுமென மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தை இரத்துச் செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
மேன்முறையீட்டு நீதிமன்றம் »15

## விபத்தில் ஒருவர் படுகாயம்

பளை, ஒக். 25
வெள்ளைக்கோட்டில் நின்றவரை மோட்டார்சைக்கிள் மோதிய நிலையில், அவர் »15

# ஆசிரியர்கள் போராட்டத்தால் கொழும்பில் நேற்றுப்பதற்றம்!

## நிலைமையைக் கட்டுப்படுத்த கண்ணீர்புகைப் பிரயோகம்!



**கொழும்பு, ஒக்ரோபர் 25**

**அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட நடை பயணத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டதால் கொழும்பில் நேற்றுமாலை பதற்றநிலை ஏற்பட்டது.** »15

## மயங்கிச் சரிந்த மூதாட்டி சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 25
தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த நிலையில் திடீரென மயங்கிச் சரிந்த மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. »15

## கூட்டமைப்பின் தலைமையை கைப்பற்ற சாணக்கியன் சதி!

### சுமண ரத்ன தேரர் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக். 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியை கைப்பற்றுவதற்கு சாணக்கியன் முயற்சிக்கின்றார். அதனால்தான் வடக்கு - கிழக்கில் கூட்டமைப்பின் »15

## காணாமற்போன பெண் கொன்று புதைப்பு!

### சந்தேகநபரான கணவன் கொழும்பில் கைதானார்

முல்லைத்தீவு, ஒக். 25
முல்லைத்தீவில் இளம் குடும்பப்பெண்ணைக் காணவில்லை என்று அந்தப் பெண்ணின் தாயார் முறைப்பாடு வழங்கியுள்ள நிலையில், காணாமற்போன இளம் குடும்பப்பெண் அவரது கணவனால் கொன்று புதைக்கப்பட்டுள்ளார். »15

### வழிபாட்டில் ஈடுபட்ட மூதாட்டி

## டிப்பர் வாகனம் மோதிப் பலி!

### நீர்வேலியில் சோகம்

யாழ்ப்பாணம், ஒக். 25
ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வயோதிபப் பெண் ஒருவர் டிப்பர் வாகனம் மோதியதில் உயிரிழந்தார். நீர்வேலி மேற்கைச் சேர்ந்த தனபால »15

MOBILE



Unlimited Call
BOOSTER 650
முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள்
ரூ.650/- இனை ரீலோட் செய்து
அல்லது #147#
அழைத்து செயற்படுத்திடுங்கள்.
பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள்
1717 இற்கு அழைத்து, செயற்படுத்துவது குறித்த மேலதிக விவரங்களைப் பெற்றிடுங்கள்.

எந்தவொரு வலையமைப்பிற்கும்
UNLIMITED
CALLS
மாதம் ரூ.650/- மட்டுமே.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

TRC/M/PRO/22/04 www.sltmobitel.lk
SLTMOBITEL





உங்கள் கட்டுமானம் முழுமையான தோற்றம் பெற்றிட.... Robbialac

பல வர்ணத் தெரிவுகளுடன் பாரிய இடப்பரப்பிற்கு பூசக்கூடிய, உன்னதத் தரத்திலான Robbialac உடன் உங்கள் கட்டிடத்தின் உட்புற மற்றும் வெளிப்புற சுவர்கள், தரை, கதவுகள் மற்றும் ஜன்னல்கள் என அனைத்திற்கும் வர்ணமயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்...உங்கள் கட்டுமானத்திற்கு முழுமையானதோர் தோற்றத்தைப் பெற்றுக் கொடுங்கள்....





Robbialac
Adding Colour to Life.

Tel: 0777 577 572 E-mail: robbialac@lankem.lk Web: www.robbialac.lk www.facebook.com/LankemRobbialacSL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் பணிமனையின் வாணி விழா நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரி மாணவர்களான ச.சரபின், சி.கௌசிகன், மு.அபிஷேக், ச.கிருஷன், பா.கேஜிகன் ஆகியோரின் சகலகலாவல்லிமாலை ஓதுதலும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவி விமல்ராஜ் டிருத்திகாவின் நடனமும் விழாவை அலங்கரித்தன. (ம)

### இந்திய இராணுவத்தின் தாண்டவம்

# கொக்குவில் படுகொலைகள் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று

**யாழ்ப்பாணம், ஒக். 25**

**இந்திய இராணுவத்தால், கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட 50க்கும் மேற்பட்ட பொதுமக்களின் 36ஆவது நினைவேந்தல் நேற்றுச் செவ்வாய்க்கிழமை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.**

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. பிரதான சுடரைத் தொடர்ந்து, நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டுத் தொடர்ந்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் நல்லூர்ப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் இ.ஜெயகரன், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி இந்திய இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக் குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில் கிழக்கு, ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்தார்கள். தங்களை அகதிகள் என அடையாளப்படுத்தும் நோக்குடன் பாடசாலையின் முக்கியமான இடங்களில் வெள்ளைக் கொடியையும் பறக்கவிட்டிருந்தனர். இதன்போது காங்கேசன்துறை வழியாக யாழ்.நகரப்பகுதி நோக்கி விரைந்துகொண்டிருந்த இந்திய இராணுவத்தினர், பொதுமக்கள் இருந்த பாடசாலைக் கட்டடங்கள் மீது மிலேச்சத்தனமான பீரங்கித் தாக்குதலை நடத்தினார்கள்.

இந்தத் தாக்குதலில், யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரம் உட்பட 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் எண்பது பேர் படுகாயமடைந்தனர்.

உரிய முறைப்படி தகனம் செய்வதற்கான சூழ்நிலையில்லாத காரணத்தால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரே குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-66)

# போதை கடத்தலைத் தடுக்க தடுப்புக் கட்டளை நிறுவனம்

### விரைவில் அமைக்கப்படும் சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படுவதை தடுப்பதற்காக போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று விரைவில் நிறுவப்படும் என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கெனத் தயாரிக்கப்பட்டு வரும் சட்டவரைவு எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அண்மையில் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து மீட்கப்பட்ட 4 பில்லியன் ரூபா பெறுமதியான 200 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை மேற்பார்வை செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருள்களில் 65 வீதத்தை மட்டுமே தடுக்க முடிந்துள்ளது. ஏனைய 35 வீதமான போதைப்பொருள் நாட்டுக்குள் எடுத்து வரப்படுகிறது. இதனை முற்றாகத் தடுப்பதற்கு கடல்சார் வேலைத்திட்டமொன்று அவசியம். போதைப்பொருள் வலையமைப்புகள் உலக அளவில் வியாபித்துள்ளன. அதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும்.

அதற்கென புதிய போதைப்பொருள் தடுப்புக் கட்டளை நிறுவனமொன்று நிறுவப்படவுள்ளது. அதற்கான சட்டம் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். (ச-44-26)

# டொலர் ஏறுமுகம்!

கொழும்பு, ஒக். 25

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று வீதங்களின் அடிப்படையில், டொலர் தொடர்ந்தும் ஏறுமுகத்திலேயே பதிவானது.

நேற்றைய நிலவரத்தின்படி அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் கொள்வனவுப் பெறுமதி 320.81 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 331.39 ரூபாவாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நல்லூர்க் கந்தனில் மானம்பு உற்சவம்




யாழ்ப்பாணம், ஒக். 25

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி மானம்பு உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. கருவறையில் வீற்றிருக்கும் அலங்காரக் கந்தனுக்கு விஷேட அபிஷேக கிரியைகள் இடம்பெற்று முருகப் பெருமான் குதிரைவாகனத்தில் வெளிவீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் திடீர் மாற்றம்; ரணிலின் முடிவு சரியானதே!

## வக்காலத்து வாங்குகிறார் பாலித ரங்கேபண்டார



கொழும்பு, ஒக்.25

**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டுக் கட்சியிடம் வலிந்துசென்று, எந்தவொரு பதவியையும் கேட்கவில்லை. அந்தக்கட்சியினர்தான் அவரைப் பிரதமர் பதவியையும் பின்னர் ஜனாதிபதிப் பதவியையும் ஏற்குமாறு கோரினர். எனவே, அமைச்சுப் பதவியா? நாடா? என்பது குறித்து அந்தக்கட்சியே முடிவெடுக்க வேண்டும்." என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

சுகாதார அமைச்சு பதவியில் இருந்து கெஹலிய ரம்புக்வெல நீக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் மொட்டுக் கட்சி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அத்துடன், மொட்டுக் கட்சிக்குரிய அமைச்சுப் பதவியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கிய ஜனாதிபதியின் முடிவு தவறு எனவும் அந்தக் கட்சி கடுமையாகச் சாடியுள்ளது.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே பாலித ரங்கே பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எமது ஜனாதிபதி கட்சிநலனை விடவும், நாட்டின் நலனுக்கும், மக்களின் நலனுக்குமே முன்னுரிமை கொடுப்பவர்.

அதனால் தான் எவராலும் செய்ய முடியாத பொருளாதார மாற்றங்களை மிகக் குறுகிய காலத்தில் செய்துகாட்டியுள்ளார்.

எனவே இம்முறை அமைச்சுப் பதவி வழங்கலிலும் அவர் மிகச் சரியான முடிவையே எடுத்துள்ளார் என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதைவிடுத்து, ஒரு கட்சியின் நலனை மட்டுமே ஜனாதிபதி கவனத்திற் கொண்டு, சரியான முடிவை எடுக்கத் தவறினால் மீண்டும் நாடு பொருளாதாரச் சிக்கலுக்குள் போகும் வாய்ப்பு அதிகம். மொட்டுக்கட்சியினர் தமது நலனை விடவும் நாட்டு நலனுக்காக ஜனாதிபதி எடுத்த இந்த முடிவை ஏற்கத்தான் வேண்டும்' என்றும் அவர் தெரிவித்தார். (அ-44)



## மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஒக். 25

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் கிளிநொச்சி தமிழரசுக் கட்சியினரால் நேற்றுச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் கட்சி உறுப்பினர்களால் நேற்றுக்காலை இந்தத் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பெருமளவானோர் ஆர்வத்துடன் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-214)

## தென்மராட்சி கலைஞர்கள் ஒன்றுகூடலும் ஆற்றுகையும்

யாழ்ப்பாணம், ஒக். 25

தென்மராட்சிப் பிரதேசக் கலைஞர்களின் ஒன்றுகூடலும் ஆற்றுகை நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தவுள்ளன என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ச-9)

## பிக்குவைத் தாக்கி பணம் கொள்ளை!

கொழும்பு, ஒக். 25

இத்தாலிக்குச் செல்லத் தயாராகவிருந்த பௌத்த பிக்கு ஒருவரைத் தாக்கி அவரிடமிருந்த 112 யூரோ மற்றும் 7 இலட்சம் ரூபா இலங்கைப் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

சிலாபம் பகுதியில் இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ள நிலையில், சந்தேகநபரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை சிலாபம் பொலிஸார் துரிதப்படுத்தியுள்ளனர். (ம)

## வவுனிக்குளத்தில்

# ரூ.15 இலட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்பு!

முல்லைத்தீவு, ஒக். 25

முல்லைத்தீவு - வவுனிக்குளத்தில் சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்கப்பட்டுள்ளன.

**கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குமார குலசிங்கம் சங்கீதன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.**

(ம-214)



## படி தினம் தெரியுமோ?

**வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிக்கிறதில எங்கட 'அமுல்பேபி' அரசியல்வாதியிட்ட எல்லாரும் பிச்சை எடுக்கோனும். அந்தளவுக்கு ஆள் ஓசியில தனக்குப் பேர் எடுத்து. அதை வாக்காவும் மாத்திப்போடுவார். போனமுறை மாதிரி இனியும் அவர் பாழாப்போன தன்ர கனவை வைச்சு உருட்டமுடியாது. அதைமாதிரி 'இளம் ஆக்கள் எல்லாருக்கும் வேலைவாய்ப்பு' வாங்கிக் குடுப்பன் எண்டும் ஏமாத்தேலாது. ஏனெண்டால் நாடு கிடக்கிற கிடையில ஒரு வாய்ப்பானைக் கூட வக்கில்லாத நிலையில இருக்கேக்க, என்னெண்டு வேலைவாய்ப்பை வாங்கிக் குடுக்கிறது? அதால இனிமேல் என்னத்தைச் சொல்லி ஆக்களைப் பேய்க்காட்டலாம் எண்டு யோசிச்சவருக்கு, 'டக்' கெண்டு ஒரு ஐடியா வந்திருக்குது.**

**இலங்கையின்ர பெரிய பணக்காரரான தம்மிக்க பெரேரா, இப்பத்தைக் காலத்துக்கு ஏத்தமாதிரியான கொம்பியூட்டர் தொழினுட்ப விசயங்களை எல்லாரும் படிச்சு தெரிஞ்சு கொள்ளுறமாதிரி , இலவசமா சில சேவைகளை 'ஒன்லைன்ல' செய்துகொண்டு வாறார். ஆர்வமுள்ள எல்லாரும் என்ன 'கோர்ஸ்' செய்ய விரும்புகினமோ, அதுக்குரிய 'லிங்கை' அமத்தி தேவையான நேரம் அதுகளைப் படிச்சுக் கொள்ளலாம். ஆனால் இப்பிடி ஒரு விசயம் இருக்கெண்டு சிங்கள ஆக்களுக்குத்தான் கூடத் தெரியும். இஞ்சாலிப்பக்கம் உதுகள் இன்னும் தெரியாது. அதால எங்கட 'அமுல்பேபி' அரசியல்வாதி என்ன செய்தார் எண்டால், யாழ்ப்பாணத்து இளம் ஆக்களுக்கு தான் இலவசமா இந்த தொழினுட்ப விசயங்களை ஒரு கல்லூரி மூலம் படிப்பிக்கிற மாதிரி படம் காட்ட ஆசை வந்திருக்கு. அதுக்கு கிட்டடியில யாழ்ப்பாணம் வந்த இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயனனை வைச்சு திறப்பு விழாவும் செய்திருக்கிறார். பாவம், சந்தோஷ் நாராயணனுக்கு 'அமுல்பேபியின்ர' வாக்கு விளையாட்டுக்கள் தெரியாததால, அவரும் திறந்து வைச்சிட்டுப் போட்டார். இப்ப என்னெண்டால் 'அமுல்பேபியின்ர' திட்டத்தில பேர் விவரம் எல்லாம் குடுத்துப் பதிஞ்சால் தான், ஒவ்வொருத்தருக்குமுரிய 'கோர்ஸுக்கான' இணைப்பைக் குடுக்கலாம் எண்டு அறிவிச்சிருக்கினம். ஆனால் நேரடியா தம்மிக்க பெரேரா நடத்துற இணையத்துக்குப் போனால், உப்பிடியொரு பதிவுமில்லாமலே தேவையானதைப் படிச்சுப்போட்டு வரலாம்.**

**அப்பிடி தம்மிக்க பெரேராவின்ர இணையத்தில இருக்கிறதை 'ஆட்டையைப் போட்டு', அதைத் தாங்கள் யாழ்ப்பாணத்துச் சனத்துக்கு மட்டுமே செய்யிற உலக மகா சேவை மாதிரிக் காட்டிக் கொள்ளுற 'அமுல்பேபி' அண்ட் கோ என்னத்துக்கு ஆக்களின்ர பேர் விவரத்தைக் கேக்கினம்? எல்லாம் காரியமாத்தான். முந்தி 'அமுல்பேபி' அரசியல்வாதி தன்ர செல்வாக்கைப் பயன்படுத்தி சமுர்த்தி உத்தியோகத்தை கொஞ்சப்பேருக்கு எடுத்துக் குடுத்தவர். பிறகு தொட்டதுக்கு அவையைக் கூப்பிடுறது, மீற்றிங் வைக்கிறது எண்டு அவையைப் பாடாப்படுத்தினர். போனமுறை வேலைவாய்ப்பு எண்டு சொல்லி, இளம்பெடியள் பெட்டையளிட்ட இருந்து 'பயோடேட்டா' வாங்கிப் போட்டு, பிறகு அந்த 'பயோடேட்டாவில' இருக்கிற போன் நம்பருக்கு கோல் பண்ணி, தங்களுக்கு எலக்சன் வேலை செய்யச் சொல்லிக் கேட்டிருக்கினம் அண்ணனின்ர விழுதுகள். அதைமாதிரி இந்தமுறையும் எலக்சனுக்கு வேலை செய்யிறதுக்கு தங்களுக்கு சில அடிமைகளைப் பிடிக்கத்தான் உந்த விவரமெல்லாம் கேக்கினமாம். (ஆருக்கும் அப்பிடி கொம்பியூட்டர் கோர்ஸ் ஏதும் இலவசமா 'ஒன்லைன்ல' படிக்கோனும் எண்டால், நேரடியாவே தம்மிக்க பெரேராவின்ர அறக்கட்டளையால நடத்தப்படுற இணையத்தில போய் ஒரு பதிவும் இல்லாமல் தாராளமாப் படிக்கலாம்)**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உதயனின் ஊடக அனுசரணை

# தென்மராட்சி கிரிக்கெட் தொடர்: ரொக்கர்ஸ் அணி சம்பியனானது

**யாழ்ப்பாணம், ஒக். 25**

**உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்ற தென்மராட்சி கிரிக்கெட் தொடரில் நுணாவில் ரொக்கர்ஸ் அணி சம்பியனானது. மட்டுவில் கண்ணகை விளையாட்டு மைதானத்தில் கடந்த 21ஆம் திகதி இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது.**


இறுதியாட்டத்தில் நுணாவில் ரொக்கர்ஸ் அணியை எதிர்த்து சாவகச்சேரி ஸ்பாட்டன் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி ஸ்பாட்டன் அணியினர் அனைத்து இலக்குகளையும் இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ரொக்கர்ஸ் அணியினர் விக்கெட் இழப்பின்றி நான்கு பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்து சம்பியனானது. இறுதியாட்டத்துக்குப் பிரதம விருந்தினராக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொண்டார். (ம-125)

## 'வீனஸ்' மருத்துவமனையின் பணியாளர்கள் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள வீனஸ் தனியார் மருத்துவமனையின் ஆண்டு விழாவையொட்டி கடந்த 19 ஆம் திகதி மருத்துவமனைப் பணியாளர்கள் யாழ்.போதனா மருத்துவமனையின் குருதி வங்கிக்கு குருதிக் கொடையளித்தனர்.

அத்துடன் அன்றைய தினம் மருத்துவமனையில் 300 க்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு இலவச மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டன. (ச)



## யாழ்ப்பாணம் போதனாவில் உலக இதய நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ் .போதனா மருத்துவமனையில் உலக இதய நாள் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.

யாழ்.போதனா மருத்துவமனையின் இதய சிகிச்சைப் பிரிவு வடபகுதியில் உள்ள அனைவருக்குமாக பல்வேறு சிகிச்சைகளை வழங்கிவருகிறது. வடபகுதிக்கு அப்பால் திருகோணமலை, அநுராதபுரம், புத்தளம் போன்ற மாவட்ட மக்களும் இந்த சிகிச்சைப் பிரிவால் கணிசமாகப் பயன்பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-100)

## பரு.கடற்கரையில் துப்புரவுப் பணிகள்

யாழ்ப்பாணம், ஒக். 25

நெல்லியடி மற்றும் பருத்தித்துறை கொமர்ஷல் வங்கி ஊழியர்கள் இணைந்து பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் பருத்தித்துறை நகரசபைக்கு கழிவுகள் சேகரிக்கும் பெட்டிகளும் வங்கியால் நன்கொடையளிக்கப்பட்டன. (ச-20)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவில் கவனமாக இருக்கவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடியுங்கள். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி கிட்டும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்ததைவிட லாபம் குறைவு. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற் படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சங்கடங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம் :** அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

## வில்லிசைப் போட்டியில் பச்சிலைப்பள்ளி தேசியம்

யாழ்ப்பாணம், ஒக். 25

மாகாணமட்ட வில்லிசைப் போட்டியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவின் கலைஞர் நாகராசா நகுலேஸ்வரன் தலைமையிலான வில்லிசைக் குழுவினர் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

மாகாண சமூக சேவைத் திணைக்களத்தால் கிளிநொச்சி மாவட்ட கலைஞர்களிடையே அண்மையில் இந்தப் போட்டிகள் நடக்கப்பட்டன. (ச-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா வடக்கில்

# கிராமஅலுவலர்கள் சுகவீனப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.25

புளியங்குள பொலிஸ் நிலையப் பொலிஸாரின் அசமந்தப்போக்கைக் கண்டித்து வவுனியா வடக்கு கிராம சேவகர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சிறிலங்கா ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தால் வவுனியா வடக்குப் பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

புளியங்குளம் வடக்கு கிராமஅலுவலர் பிரிவில் அரச காணி தொடர்பான வெளிக்களக் கடமையின்போது கிராமசேவகர் மா.சுரேந்தர் என்பவர் பொதுமக்களால் அச்சுறுத்தப்பட்டு அவரது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. அது தொடர்பாக 3 முறைப்பாடுகள் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

கடமை புரிவதில் உயிரச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று எமது சங்கத்துக்கு எழுத்து மூலம்அறியத் தந்துள்ளார். இது தொடர்பில் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமையால், புளியங்குள பொலிஸ் நிலைய பொலிஸாரின் அசமந்தப் போக்கைக் கண்டித்து எமது சங்க உறுப்பினர்கள் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிராமசேவகரான எமது சங்க உறுப்பினர் மா.சுரேந்திரனின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். அரச கடமைக்கு இடையூறு செய்தவர்கள் மற்றும் இடையூறு செய்வோரை கைது செய்யவேண்டும்-என்றுள்ளது. (எ-7)

# ஐ.எம்.எப். உடன்படிக்கையால் கடன் மறுசீரமைப்பு துரிதமாகும்!

## செஹான் சேமசிங்க நம்பிக்கை

கொழும்பு, ஒக்.25

**சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் வேலைத்திட்டத்தின் முதலாவது மீளாய்வை நிறைவு செய்த பின்னர் ஏற்பட்ட அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாடானது, பலதரப்பு கடன் வழங்குநர்களுக்கு எஞ்சிய தவணைகளைச் செலுத்துவதற்கும் கடன் மறுசீரமைப்பைத் துரிதப்படுத்துவதற்கும் உதவும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

சர்வதேச நாணயநிதியத்துடன் நாம் மேற்கொண்டுள்ள உடன்படிக்கை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இரண்டாம் தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அவசியமாக இருந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது தொடர்பான நீண்ட மீளாய்வுகள் இடம்பெற்றன.

சர்வதேச நாணயநிதியத்தின் அதிகாரிகள் மட்டக் குழு, இலங்கைக்கு வருகை தந்து இரண்டு வாரங்களாக விரிவான மீளாய்வுகளை நடத்தியது. மேலும் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெறவேண்டி இருந்தமையால், எங்களால் அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

கடந்த 19ஆம் திகதி, இந்தத் தீர்மானமிக்க அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரும் செயற்பாடு, சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மற்றும் எமது நாட்டின் அதிகாரிகள், பிரதானமாக மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருக்கிடையில் நடைபெற்றது.

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுக் குழுவினால், இந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு, அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் இரண்டாவது தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை பெற்றுக்கொள்ளும். அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாடு, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பலதரப்பு கடன் வழங்குநர்களுக்கு எஞ்சிய தவணைகளைச் செலுத்துவதற்கும் அதன்மூலம் சர்வதேச தரப்பினர்களுடன் கடன் மறுசீரமைப்பைத் துரிதப்படுத்துவதற்கும் உதவும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது - என்றார். (எ-44)

# குடிகாரர்களின் சொர்க்கமாக மாற்ற முயற்சிக்கின்றது அரசு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.25

இலங்கையை குடிகாரர்களின் சொர்க்கமாக மாற்ற அரசு முயற்சிக்கின்றது எனவும், சட்டவிரோதமான முறையிலேயே மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு, பொரளை பௌத்த இளைஞர் சங்கக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை மதுப் பாவனைக்கெதிரானோர் சங்கத்தின் 111 ஆவது பொதுச்சபை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிராம மட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்குப் பதிலாக ஆளும் கட்சி உறுப்பினர்களது கையொப்பத்துடன் பியர் உரிமப் பத்திரம் வழங்கும் திட்டம் நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

சுற்றுலாவை ஊக்குவிப்பதாகக் கூறிக்கொண்டு விகாரைகள், கோவில்கள்,தேவாலயங்கள், பாலர் பாடசாலைகள் மற்றும் சுகாதார மையங்களுக்கு அருகில் இதுபோன்ற பியர் பார்களை திறக்க உரிமம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தநாட்டை குடிகாரர்களின் சொர்க்கமாக மாற்ற முயற்சிக்கின்றனர். வரி செலுத்தவேண்டிய மக்களிடம் இருந்து முறையாக வரியை அறவிடாது, இந்த அரசு மூன்றாவது தடவையாகவும் மின் கட்டணத்தை சட்டவிரோதமாக அதிகரித்துள்ளது. இந்த கேவலமான செயலால் இந்தநாட்டு மக்கள் நிர்க்கதி யாகியுள்ளனர் - என்றார். (எ-44)

# ரணில் செயல்வீரரே!

## வஜிர புகழாரம்

கொழும்பு, ஒக்.25

இந்த நாட்டை மீட்கக்கூடிய 55 வருடகால அரசியல் அனுபவம் மிக்க தலைவரே ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க. அனைவராலும் வீராப்பு பேசமுடியும். ஆனால் செய்து காட்டும் பழக்கம் ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது.

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-


நேருவிடம் ஒரு தூரநோக்குச் சிந்தனை இருந்தது. அதேபோல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் தூரநோக்குச் சிந்தனை இருக்கிறது.

55 வருடகால அரசியல் அனுபவம் இருந்ததால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடு வீழ்ந்த போதும் அதனை மீட்கமுடிந்தது. வரிசை யுகம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. நெருக்கடி இல்லாத நிலைமை உருவாகியுள்ளது. சவால்களுக்கு மத்தியில் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ஒரு கோடி வாக்குகளைப் பெற்று மக்கள் ஆணையுடன் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியமைப்பார் என்ற நம்பிக்கை எம்மிடமுள்ளது - என்றார். (ச-44)

# வருமானம் ஈட்டும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை!

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக்.25

நாட்டுக்கு புதிய வருமானத்தை ஈட்டுவதற்கு எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பகுதிகளுக்கு நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயத்தைத் தெரிவித்து வருகிறார். நாட்டுக்கு புதிய வருமானத்தை ஈட்டுவதற்கு எந்த வித திட்டத்தையும் அவர் முன்வைக்கவில்லை.

2015ஆம் ஆண்டு இலங்கையை 60 மாதங்களில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவேன் எனத் தெரிவித்தார். தற்போது 2048 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றிரவு எதை உண்பது? காலையில் எவ்வாறு பாடசாலைக்குச் செல்வது? என்றே சாதாரண மக்கள் சிந்திக்கின்றனர். இந்த நிலையில் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கப்படுகின்றன. நியாயமான அதிகரிப்புக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள்.

- இவ்வாறு குருதியை உறிஞ்சினால் அடுத்த தேர்தலில் நல்ல பதிலடி கிடைக்கும். மக்களைக் கசக்கி பிழியும் வரவு - செலவுத் திட்டம் ஒன்றே உருவாக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவுக்கு ஜனாதிபதி ஆதரவு வழங்குவாரா என்பது தெரியாது. அவ்வாறு நடக்கவில்லை என்றால் நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்குச் செல்லவேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி- தோல்வி மனப்பாங்கை மாணவரிடையே விதையுங்கள்!

## கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.25

பெற்றோர் தம் பிள்ளைகளின் மனநிலையை அறிந்து அவர்களை விளையாட்டுத்துறைகளில் ஈடுபடுத்தவேண் டும்.

இதன்போது வெற்றி- தோல்வி மனப்பாங்கினூடாக மனவலிமையை ஏற்படுத்தமுடியும் - ஆரோக்கியமுள்ளவர்களாக மாற்றமுடியும்.

-இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் மூன்றாம் காலாண்டுக்கான கலந்துரையாடல் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:



அண்மைக்காலமாக இளையோரிடையே உயிர்மாய்ப்புகள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

சமூக ஊடகங்கள் சமூக முன்னேற்றங்களுக்கு அளப்பரிய பங்காற்றி வருகின்றபோதிலும், தற்கொலைகள் போன்ற செய்தி அறிக்கையிடும்போது சமூகத்துக்கு எத்தகைய தாக்கத்தை விளைவிக்கும் என்பதை நினைவிற்கொண்டு அறிக்கையிட வேண்டும்.

குறிப்பாக தற்கொலை தொடர்பான செய்திகளை அறிக்கையிடும் போது கடிதங்கள், சுயவிவரங்கள், புகைப்படங்களை வெளியிடும் போது அவை ஏனையவர்களின் மனதில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும்.

தற்போதைய காலகட்டத்தில் சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் நிறைவில் மாணவர்களுக்கும் கல்விக்குமிடையில் பெரிய இடைவெளி காணப்படுகின்றது.

இந்த விடுமுறை காலப்பகுதியை பெற்றோர் சரியான வகையில் பயன்படுத்தவேண்டும். பிள்ளைகளை விளையாட்டுத் துறையில் ஈடுபடுத்தவேண்டும். வெற்றி - தோல்வி மனப்பாங்கினூடாக மனவலிமையை அவர்களிடத்தே ஏற்படுத்தமுடியும் - என்றார். (ச-113)



## ஆய்வுநூல் வெளியீடு!

யாழ்ப்பாணம், ஒக். 25

ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா எழுதிய 'இலங்கை சுதந்திரம் அடைந்த பின் கல்வித் துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் ஓர் ஆய்வு 1505 - 1980 ' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. சத்தியபாலன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச. லலீசன் ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்தினர். நூலின் வெளியீட்டுரையை வடமாகாணப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தர்மலிங்கம், மதிப்பீட்டுரையை கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் அ. பௌநந்தி ஆகியோர் ஆற்றினர். (ச-66)


### விற்பனைக்கு

இரண்டு மேசைகள், ட்ரெஸ்சிங் ரேபிள் (Dressing Table), கதிரை, சாப்பாட்டு மேசை, கதிரை விற்பனைக்குண்டு.

தொடர்பு : 75/9, முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி ( தினேஸ் பேக்கரிக்கு அருகாமையில்)

076 6757654, 075 7710115

(cs. 26696 M.1)

### மணமகள் தேவை

1. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. அனுசம். Quantity Surveyor, அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
2. சுதுமலை. இந்து. கௌரவகுலம் (V). 1975. மிருகசீரிடம். BA, Graduate, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
3. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1988. உத்தரம். BSc., Civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
4. இளவாலை. இந்து. கௌரவகுலம் (V). 1975. அனுசம். Diploma, Divorced, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
5. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA (Hons), Accountant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
6. மயிலிட்டி. இந்து. குருகுலம். 1981. அத்தம். Accountant, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
7. மல்லாகம். இந்து. கௌரவகுலம். (K). 1986. மிருகசீரிடம். Degree in Business Administration, UK. மணமகனுக்கு மணமகள் தேவை.
8. யாழ். இந்து. கௌரவகுலம். (V). 1986. மகம். BSc, MSc, UK, மணமகனுக்கு மணமகள் தேவை.
9. மானிப்பாய். இந்து. கௌரவகுலம். (V). 1986. திருவாதிரை. Quantity Surveyor, Newzealand, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
10. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம். (V). 1984. ரேவதி. MBBS Doctor, Dentist, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
11. பளை. இந்து. கௌரவகுலம். (V). 1984. அவிட்டம். Phd, Divorce, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
12. கோப்பாய். இந்து. கௌரவகுலம். (V). 1984. சதயம். MBBS Doctor, Ireland Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728

### பெயர்மாற்றம்

இல.10/5, புதிய வீடமைப்புத் திட்டம் குருநகர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **செ.சகாயமலர்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **மு.குணமலர்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மு.குணமலர்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cs.52614) (N.I) மு.குணமலர்

### கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதிப்பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்

**திரு.திருமதி B.J.V. றமேஷ்குமார்**

அவர்களின் அன்புத் தாய்

**திருமதி இமெல்டா கிறிஸ்ரோபர்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.52616) (N.I)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வு இந்தியாவில் ஜே.பி.ஹோட்டல், கோயம்பேடு, சென்னையில் 15.10.2023 அன்று நிகழ்ந்த வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த சமூக சேவையாளரும் கல்வி கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப்

**பாராட்டி மகாத்மா காந்தி சமாதான விருது**

வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.



Congratulations Congratulations

உரிமையாளரும், ஊழியர்களும்

**சிறி மீனாட்சி நகை அகம்**

177B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cr.405360) (N.I)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 03 . 1928



இறப்பு 24 . 10 . 2023

**திருமதி அப்பாக்குட்டி (வைத்திலிங்கம் மாஸ்ரர்) நல்லம்மா**

மீசாலை வடக்கு கொடிகாமம் தட்டாங்குளம் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை சொர்ணம்மா அவர்களின் மகளும், இரட்ணராசா, இரட்ணலட்சுமி, அமரர் இரத்தினகுமார் (சின்னத்தம்பி), இரட்ணேஸ்வரன், இரட்ணலிங்கம், இரட்ணமலர், இரட்ணரதி ஆகியோரின் தாயாரும், ஜெயகங்கா, திலகரட்ணம், விஜயலக்சுமி, கிருஜா, அமரர் ரவிவர்ணன் (பாப்பா), குகநாதன் ஆகியோரின் மாமியாரும், பேரப்பிள்ளைகளின் அன்பு பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2023) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தட்டாங்குளம், மீசாலை வடக்கு, புத்தூர் சந்தி.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 26712)A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# எம்மதமும் சம்மதமா?

மன்னாரில் நடைபெற்ற மீலாதுன் நபி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'இலங்கையில் அனைத்து மதங்களுக்கும் சரிசமனாக இடமளிக்கப்படும்' என திருவாய் மலர்ந்துள்ளார். ஜனாதிபதியின் இந்த உரை அனைத்து ஊடகங்களிலும் பிரதான இடத்தைப் பிடித்துள்ளதுடன், சர்வதேசரீதியிலும் அவரது 'கனவான் அரசியல்வாதி' விம்பத்தை இன்னும் கொஞ்சம் உருப்பெருப்பிக்கவும் உதவியுள்ளது. இந்த உரையின் மூலம் ஜனாதிபதி ரணில் சொல்ல வருகின்ற செய்தி என்ன?

சிறிலங்கா குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டபோதே நாட்டின் அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கிப் பேணிப்பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை எனக் கூறப்பட்டுள்ளது. பின்னர் 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த அரசமைப்பிலும் இதே விடயமே வலியுறுத்தப்பட்டுள்ளது. இது 'தேசிய கீதம் இசைக்கும்போது கூட பௌத்த குருமார் அதற்கு மரியாதை செலுத்தத்தேவையில்லை' என்கிற அளவுக்கு பௌத்த மதத்துக்கு எல்லாவற்றிலும் இருந்து விலக்களிக்கவும் முற்படுகின்றது. எல்லா நாடுகளிலும் அவற்றின் தேசியகீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பங்களில் நாட்டின் ஜனாதிபதிகூட, எழுந்து நின்றே மரியாதை செலுத்தவேண்டும். ஆனால் இலங்கையில் ஜனாதிபதி எழுந்து நின்றாலும், கூட பிக்குகள் கதிரையில் இருந்து காலாட்டியபடி தேசியகீதத்தை ரசிப்பார்களே தவிர மதிப்புக் கொடுக்கமாட்டார்கள். அதேமேடையில் பிறமதத்தைச் சேர்ந்த இந்துக்குருமார், மௌலவி, கிறிஸ்தவ குருமார் என்போர் இருந்தால் அவர்களும் எழுந்துநிற்கவேண்டும். பிக்குவைப் போல அவர்களுக்கு தேசியகீதத்தின்போது அமர அதிகாரமில்லை. இப்படி தேசியகீதம் பாடுகையில் கூட, பௌத்தத்தை தூக்கிப் பிடிக்கும் ஒருநாட்டில், 'அனைத்து மதங்களும் சரிசமமாக நடத்தப்படும்' என ரணில் கூறியமை எவ்வளவுதூரம் உண்மையானது என்பது சிறுபான்மையினருக்கு நன்குபுரியும்.


அனைத்து மதங்களுக்கும் சரிசமமான இடம் என்ற சொல்லாடலின் ஊடாக ரணில் உணர்த்தவிரும்பும் செய்தி என்ன? மதச்சார்பற்ற நாடாக இலங்கையைப் பிரகடனப்படுத்தப் போகிறாரா? அது சிங்கள– பௌத்த சிறிலங்காவில் கனவு கூட காண முடியாத விடயம். அல்லது மதகுருமார் என்றால் அனைவரும் சமம் என பிக்குமாரைப் போன்று இந்து,கிறிஸ்தவ, இஸ்லாமிய மதகுருமாரும் தேசிய கீதத்துக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்தத்தேவையில்லை என்று சொல்லப் போகிறாரா?அதுவும் ஒருபோதும் நடக்காத காரியம். அப்படி ரணில் அறிவிப்பாராயின் அன்றோடு அவர் மூடை முடிச்சுகளோடு, ஜனாதிபதி மாளிகையைவிட்டு வெளியேறவேண்டியதுதான். பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமையில் கைவைத்தால் அது ஜனாதிபதியின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடும்.எனவே அத்தகைய விஷப்பரீட்சையில் ஒருபோதும் ரணில் இறங்கமாட்டார் என்பது திண்ணம்.எனவே ராஜபக்ச சகோதரர்கள் செய்தது போல், பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ளது போல் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட சலுகைகளை இல்லாமல் செய்யப்போகிறாரா ரணில் ?

ஆனால் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மதச் சலுகைகளில் கை வைத்தால் இஸ்லாமியர்களின் வாக்கு ரணிலுக்கு கிடைக்காமல் போய்விடும். தனியே சிங்கள– பௌத்த வாக்குகளை மட்டும் நம்பி ராஜபக்சக்கள் வெற்றியீட்டியது போல் தன்னால் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதும் ரணிலுக்குத்தெரியும். எனவேதான் 'எல்லா மதங்களுக்கும் சரியாசனம்' என்ற மாயச் சொல்லொன்றை வைத்து, ஜனாதிபதித் தேர்தல் வரை தன்னை ஒரு சமயப் பொறையாளியாக காட்டி, வாக்குகளை அள்ளவே ரணில் முனைகின்றார். இதற்காகவே இம்முறை அவர் மன்னாரில் நடைபெற்ற தேசிய மீலாதுன் நபி விழாவிலும் கலந்துகொண்டிருந்து, 'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கை கொண்டவராக நாடகமாடியுள்ளார். உண்மையாகவே சகல சமயங்களையும் ரணில் நேசிப்பவராக, எல்லா மதங்களையும் ஒரே தராசில் வைத்துப் பார்ப்பவராக இருந்தால் , பௌத்தத்தின் பெயரால் தமிழ்ப்பகுதிகளில் நிகழும் ஆக்கிரமிப்புகளை அவர் எப்போதோ தடுத்து நிறுத்தியிருக்கவேண்டும். ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லையே. தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத் தலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை, அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தாமல், அந்த ஆக்கிரமிப்புகளை ஊக்குவிக்கும் ஜனாதிபதி ரணில் அனைத்து மதங்களும் சரிசமமாக நடத்தப்படும் எனக் கூறுவது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய நகைச்சுவையேயன்றி வேறில்லை.

நாளொரு நல்வார்த்தை

விவேகமுள்ள மனிதனைப்போல் சிந்தனை செய்; ஆனால் மக்களின் மொழியில் தொடர்புகொள்.

- வில்லியம் பட்லர் ஈட்ஸ்




# 7 நாடுகளுக்கு இலவச விசா!



## இலங்கை பரீட்சார்த்தத் திட்டம்

**கொழும்பு, ஒக். 25**

**ஏழு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசாவை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.**

எதிர்வரும் வருடம் மார்ச் 31 ஆம் திகதி வரை இந்தச் சலுகை வழங்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றை மேற்கொண்டு குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாட்டு மக்கள் விசா இன்றி இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவர். சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம-44)

## இலங்கைக்கு மஞ்சள் முறியடிக்கப்பட்டது கடத்தல் முயற்சி!

கொழும்பு, ஒக். 25

இலங்கைக்கு மஞ்சள் மற்றும் கடலட்டைகள் என்பனவற்றைக் கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தமிழகத்தில் வைத்து முறியடிக்கப்பட்டது.

இராமேஸ்வரம் அடுத்த மண்டபம் தெற்கு கடற்கரைப் பகுதியில் இருந்து இலங்கைக்குத் தடை செய்யப்பட்ட கடலட்டைகள் மற்றும் மஞ்சள் என்பன கடத்தப்படுவதாகக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

4 படகுகளில் இந்தப் பொருள்களைக் கடத்தத் திட்டமிட்ட எட்டுப் பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம)

எல்லைதாண்டிய மீன்பிடி

## இலங்கை மீனவர் தமிழகத்தில் கைது!



கொழும்பு, ஒக். 25

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில், 8 இலங்கை மீனவர்கள் தமிழக கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் படகுகளுடன் மண்டபம் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மண்டபம் மரைன் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். காற்றின் வேகம் காரணமாக திசை மாறி இந்தியக் கடற்பரப்புக்குள் தஞ்சமடைய நேர்ந்ததாக விசாரணைகளின்போது மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

நாளை 26.10.2023
வியாழக்கிழமை
ஐப்பசி 9

சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.33 - 03.03
பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெ.ஆபிரிக்கா மீண்டும் மிகப்பெரும் வெற்றி!



## பங்களாதேஷை பந்தாடியது

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பங்களாதேஷை இலகுவாகத் தோற்கடித்தது தென்னாபிரிக்க அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர் ஹென்றிக்ஸ் 12 ஓட்டங்களுடனும், வான் டென் டசன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். ஒரு முனையில் நம்பிக்கை வழங்கிக்கொண்டிருந்த குயின்டனுடன் இணைந்து ஆட்டத்தின் போக்கை மாற்றினார் அணித்தலைவர் மார்க்ரம். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 131 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட பின்னர் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மார்க்ரம். குயின்டனை விடவும் அடித்தாடினார் கிளாசன். மறுமுனையில் சதம் கடந்தார் குயின்டன். அவர் 174 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். 49 பந்துகளில் 90 ஓட்டங்களைக் குவித்தார் கிளாசன். முடிவில் 5 விக்கெட்டுகளுக்கு 382 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்க அணி.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்ப வீரர்களான ரன்சிட் ஹசன், லித்தன் டாஸ் இருவரும் ஏமாற்றினார்கள். சான்ரோ ஓட்டமெதையும் பெறாமலும், சகிப் அல் ஹசன் ஓர் ஓட்டத்துடனும், ரஹிம் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 81 ஓட்டங்களில் 6 விக்கெட்டுகளை இழந்தது பங்களாதேஷ். எனினும் மகமதுல்லா தனியாளாக நின்று தென்னாபிரிக்காவை எதிர்த்துப் போராடினார். எதிர்பாராத விதமாக அவர் சதத்தையும் பதிவுசெய்தார். பங்களாதேஷ் 100 ஓட்டங்களைப் பெறுவதே சந்தேகம் என்ற நிலைமாறி அந்த அணி 233 ஓட்டங்கள் என்ற கௌரவ நிலையை அடைந்தது. மகமதுல்லா 111 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 149 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வென்றது. (ம)

# உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 21

**அவுஸ்திரேலியா - நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (25.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

மெகா பரிசு

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

அவுஸ்திரேலியா
நெதர்லாந்து

**இடம் : டில்லி**
**நேரம்: பி.ப. 2.00**

# தோல்வி வலிக்கிறது களத்தடுப்பு மோசம்!



## பாபர் வேதனை


உலகக்கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அடைந்த தோல்வியால் மனம் வலிக்கின்றது என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாபர் மேலும் தெரிவித்ததாவது: இந்தத் தோல்வி எங்களுக்கு வலியைக் கொடுக்கிறது. நாங்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடினோம். நல்ல இலக்கை நிர்ணயித்தோம். ஆனால், எங்களது பந்து வீச்சு சிறப்பானதாக அமையவில்லை. மத்திய பந்துப்பரிமாற்றங்களில் நாங்கள் விக்கெட்டை வீழ்த்தவும் பவுண்டரிகளைக் தடுக்கவும் தவறினோம். அதனால் ஓட்டங்களைக் கொடுத்தோம். சுழற்பந்து வீச்சாளர்கள் சரியான லெந்தில் பந்து வீசவில்லை. ஆப்கான் அணி அனைத்துத் துறைகளிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது - என்றார். (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 19 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| க.தயாபரன் | - சுழிபுரம் கிழக்கு | க.கவிவாணன் | - பருத்தித்துறை |
| தி.மதுராகரன் | - சித்தங்கேணி | எல்.ஜீவிதன் | - மூளாய் |
| சி.மதுசன் | - மல்லாவி | எ.சத்யப்பிரியன் | - சங்கானை |
| தன்யா | - இணுவில் | அருணன் | - நானாட்டான் |
| தி.நடராசா | - யாழ்ப்பாணம் | ஜாவிகா | - கள்ளிக்குளம் |
| ச.மதியுகன் | - மீசாலை | பி.த.பிரதீஸ் | - நெல்லியடி |
| த.நிசாந்த் | - அல்வாய் கிழக்கு | எஸ்.சித்திரன் | - ஆனைக்கோட்டை |
| எல்.மதுசா | - இருபாலை | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்குப் பணிப்பெண் தேவை. ( தங்கிநின்று வேலை செய்வது விரும்பத்தக்கது.)

**077 049 2210 / 077 3696 714**

## தவறவிடப்பட்டது

தாவடிச்சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வரையான பகுதியில் **Purse** ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. தேசிய அடையாளஅட்டை, வங்கி கடனட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற முக்கிய ஆவணங்கள் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(NIC : 800641837V)

தொடர்பு:

**077 8999 536, 077 077 9809**

## மரண அறிவித்தல்

### திருமதி அரியமலர் மனோகரன்



மண்ணில் 06.12.1941 விண்ணில் 23.10.2023

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை புலோலி மேற்கு, கிராமக் கோட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியமலர் மனோகரன் அவர்கள் 23.10.2023 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், அமரர் முருகேசு மனோகரனின் அன்பு மனைவியும், ஆனந்த கதிரமலை, ஆனந்த குமாரதாஸ், ஆனந்த பாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தமணி மனோன்மணி, சுந்தரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், முருகதாஸ், சுமதி, தயானந்தன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மப்பிரபா, கிருபாரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிஸின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'கதிரமலை வாசம்'
புலோலி மேற்கு, கிராமக்கோடு.

தகவல்: குடும்பத்தினர்.
மகன் - முருகதாஸ்
மகள் - சுமதி
பெறாமகன் தயானந்தன்
077 344 3034

(CS 52231)A-1

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Vacancy Advertisement for Completion Survey Officer

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

In preparation for Sri Lanka reaching mine-free status, we are looking to recruit Completion Survey Officers for Kilinochchi, Kokkuthoduvai and Muahamlai. The Completion survey officer delivery of all completion survey activities, including supporting of Community Liaison team. Provide support to ensure the National Completion Survey Process is delivered on time and to a high standard.


**The CSOs Responsibilities are.**

- Coordinate meetings with the District Secretariat (DS) to brief them on the completion survey activity.
- Conduct GN visits with a high level of professionalism, as per your training.
- Work closely with the GIS Officer to receive updates and guidance on the Completion Survey activity and prioritize tasks.
- Collaborate with the GIS department for data entry into relevant databases, following best practices in the sector.
- Maintain a high standard when interacting with external stakeholders and government sectors.
- Coordinate with the Survey team and Community Liaison when relevant tasks arise during the Completion Survey.
- Monitor the well-being of the Completion Survey team, manage annual leave and sick leave requests.
- If necessary, engage with key external stakeholders, including NMAC, police, SLA, local and regional government authorities, as requested by the Deputy Programme Manager, Operations Manager, or other international operations staff, to advance the organization's objectives.
- Participate in Completion Survey progress update meetings and provide briefings on updates.

All applications must be submitted to the below address no later than **Tuesday 31 October 2023 either by Post or via email below.** "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
**The HALO Trust**
**450, Thirunagar west Kilinochchi**
**E-mail to hr@halosrilanka.org**

## மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 04 . 1972

இறப்பு 19 . 10 . 2023

### குலவீரசிங்கம் குலராஜன் (நிறஞ்சன்)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டி வேவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் குலராஜன் (நிறஞ்சன்) அவர்கள் கடந்த (19.10.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலவீரசிங்கம் பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், குலராஜன், சுகிர்தா அவர்களின் அன்புக் கணவரும், சியாநீதன், யதுரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிறஞ்சனா, நிசந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.10.2023) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சுதுமலை.
077 860 5675

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 52589) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 • 12 • 1942

மறைவு 21 • 10 • 2023

### கந்தையா யோகநாதன்

(முன்னாள் இ.போ.ச உத்தியோகத்தர்)

கரவெட்டி, கிழவிதோட்டத்தை பிறப்பிடமாகவும், கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா யோகநாதன் (முன்னாள் இ.போ.ச உத்தியோகத்தர்) கடந்த (21.10.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பசுபதி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் கணவரும், மதுராந்தகன் (பிரித்தானியா), முரளி, ஆர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், மகிமா, ஹேமசியா, சிவகுமார் ஆகியோரின் மாமனாரும், செல்வமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியை), யோகமலர், வைத்தியநாதன், புஸ்பமலர் (பிரித்தானியா) ஆகியோரின் சகோதரனும், மாறன், மிருன், ஆதி, ஆதித் ஆகியோரின் தாத்தாவும், காலஞ்சென்ற மகேந்திரராஜா, மகேஸ்வரராஜா (ஓய்வுபெற்ற அதிபர்), புஸ்பேந்திரா, சிவானந்தம், தமயந்திதேவி, ரஞ்சினி, காலஞ்சென்ற சத்தியகிரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

கலட்டி வீதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
0771816039


(cr.40825) (N.T)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினராஜா துர்க்காதேவி
2ஆம் வருடம்
கல்வி மற்றும் பிள்ளைநலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

## புதன் பொய்கை

"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைடந்துகண் ணோடா தவர்." -வள்ளுவர்



# மறுசீரமைக்கப்படவேண்டிய இலங்கையின் ஆரம்பக்கல்வி

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' எனும் பழமொழிக்கு இணங்க ஒவ்வொரு பிள்ளையும் தமது சிறு வயதிலேயே அதாவது ஆரம்பக்கல்வி பருவத்திலேயே கல்வியை சரியான முறையில் கற்றுத் தேறவேண்டும். ஆரம்பக் கல்வி உலகளாவிய ரீதியில் அதிக கவனத்தை பெற்றுவருகின்ற இக்காலத்தில், இலங்கையில் அதன் கட்டமைப்பு மற்றும் எதிர்காலப் போக்குத் தொடர்பில் தெளிவுபெற வேண்டியது அவசியமாகும்.

### ஆரம்பக்கல்வி என்றால் என்ன?

நிறுவன அமைப்புக்கு உட்பட்டு முறையான கல்வி பயிலத் தொடங்கும் நிலை ஆரம்பக் கல்விப் பருவமாகும். இங்கு சராசரியாக 5 ஆண்டுகள் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். கற்றலுக்கு வாசிப்பு, எழுத்து, எண், கணிதம் என்பன அடிப்படையாக அமைகின்றன. இவற்றோடு சமூக அறிவு, சுகாதார அறிவு, சூழல் அறிவு, உடற்கல்விச் செயற்பாடுகள் போன்ற பாடங்களும் மாணவர்களின் கற்றல் அனுபவத்துக்கு அவசியமாக அமைகின்றன.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகளை எடுத்துக்கொண்டால், சில பாடசாலைகள் தங்கள் பெயரை தக்கவைத்துக் கொள்ளவும், பெற்றோர்கள் தங்கள் கௌரவத்துக்காகவும் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு அதிகம் அழுத்தம் கொடுக்கின்றனர். இதனால் ஆரம்ப நிலை சார் மாணவர்களின் கற்றல் பாதிப்படைகின்றது. மனநிலை பிறழ்வடைகின்றது. 'கற்றலுக்கான கற்றல்' என்பது இங்கு கேள்விக்கு உட்படுகின்றது. கிராமப்புறப் பாடசாலைகளில் வாண்மைத்துவம்மிக்க ஆசிரியர்கள் இன்மையால் அந்தப் பாடசாலைகள் காலாகாலமாகப் பின்னடைவைச் சந்தித்து வருகின்றன. இன்றைய காலகட்டத்தில் சில பாடசாலைகளில் ஒரு வகுப்பறைக்கான மாணவர்களின் எண்ணிக்கை அளவுக்கதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் பல பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றில் மெல்லக் கற்கும் பிள்ளைகள் எதிர்கொள்ளும் பாதிப்புகளே பெரும் ஆபத்தம்சங்களாக அமைகின்றன.

### விளையாட்டுகள் அவசியம்

தரம் ஒன்று தரம் இரண்டு மாணவர்களுக்கு இன்று விளையாட்டுடனான கல்விக்கு முன்னுரிமை கொடுக்காமல் பலரும் தட்டிக்களிக்கின்றனர். விளையாட்டுகளில் ஈடுபடும்போது மாணவர்களுக்கு மகிழ்வான ஒரு சூழலை அது ஏற்படுத்தும். இது அனுபவ ரீதியான கற்றலுக்கு வழிவகுக்கும். இவ்வாறான செயற்பாடுகள் செயற்படுத்தப்படாதபோது மாணவர்கள் மகிழ்ச்சியை இழக்கின்றனர். இதனால் மாணவர்களின் இடைவிலகல்களுக்கு பாடசாலைச்சூழலே வழிவகுகின்றது. மேலும் தரம் ஐந்து புலமைப் பரிசிலானது பொருள் வசதி குறைந்த வறுமை நிலையில் காணப்படும் குடும்பங்களின் ஆற்றலுடைய மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்குதல், மதிப்புமிக்க பாடசாலைகளின் இடைநிலை கல்விக்கு மாணவர்களை தெரிதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே நடத்தப்படுகின்றது.

ஆனால் இது தற்பொழுது பெற்றோர்களின் கௌரவப் பரீட்சையாக மாறியிருக்கின்றது. இந்த அர்த்தப் பிறழ்வால் பாதிக்கப்படுவது என்னமோ அப்பாவிப் பிள்ளைகள்தான்.

ஆரம்ப வகுப்புகளில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், பாடம் முழுவதுமாக சூழல் சார்ந்த செயற்பாடாகவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று பாடத்தை கற்பிக்கும்போது ஆசிரியர் மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்வதில்லை. வகுப்பறைக்குள் வைத்து அதனை ஒரு வாசிப்பு பாடமாகவும், எழுத்து பாடமாகவுமே நடத்திச் செல்வதை அவதானிக்கமுடிகின்றது. பிள்ளைகள் சிறுவயதிலேயே பிள்ளைகள் புலன் இயக்க செயற்பாடுகளின் ஊடாக சுற்றாடலை ஆய்வு செய்கின்றனர். எனவே சூழல் பற்றிய வகுப்பறைக் கற்றலால் பிள்ளைகளுக்கு எந்தப் பயனும் இல்லை.

ஆரம்ப வகுப்பு கலைத்திட்டங்களைத் தயாரிக்கும்போது பாட விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சுய சிந்தனை, குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல், சிந்தனை வெளிப்பாடு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். கலைத்திட்டத்தை உருவாக்குபவர்கள் நடைமுறைக்குத் தேவையான விடயங்களையும் உள்ளீர்க்க வேண்டும். கணிப்பீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கருப்பொருள்களை கற்பிக்கும்போது நிகழ்கால அனுபவங்களை பெறக்கூடிய வகையில் கற்பித்தல் வேண்டும்.

### பின்லாந்து காட்டும் பாதை

உதாரணமாக உலகில் தலைசிறந்த கல்வியை போதிக்கும் பின்லாந்தில் 7 வயதில் பாடசாலையில் சேரும் பிள்ளை முதல் மூன்று ஆண்டுகளும் சிறிது நேர கற்றலிலும் ஏனைய நேரங்களை விளையாட்டிலுமே செலவிடுகின்றது. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பரீட்சைகளை இலக்காகக் கொண்ட கல்வியை கைவிட்டு நடைமுறை விடயங்களை நேரடியாகக் காண்பித்து கல்வி பயிற்றுதல் வேண்டும். அனுபவக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.


இலங்கையின் கல்விமுறை மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற குரல்கள் வலுத்துள்ள இக்காலத்தில், ஆரம்பக்கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் துறைசார் அதிகாரிகள் உச்சபட்சக் கவனக்குவிவுடன் செயற்படவேண்டும். ஏனெனில் ஆரம்பக்கல்வியே அச்சாணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலரும் ஆரோக்கியமும்

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையும் அகில இலங்கை சைவ மகாசபையும் இணைந்து 28.10.2023 நடத்தவுள்ள திருமந்திர ஆன்மீக மாநாடு தொடர்பான கட்டுரை)

சித்தமருத்துவர் தியாகராஜா சுதர்மன்
மானிப்பாய்.



தமிழர் வரலாற்றில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும், பதினெண் சித்தர்களில் ஒருவராகவும் இருப்பவர் திருமூலர். இவரது திருமந்திரம் என்னும் நூல் பத்தாவது திருமுறையாகவும், தமிழ் ஆகம நூலாக மட்டுமன்றி உள, உடல், சமூக, ஆன்மீக நன்நிலையைத் தரும் நூலாகவும் காணப்படுகின்றது.

திருமூலர் சித்த மருத்துவத்தில் பதினெண் சித்தர்களில் முதன்மையான சித்தராகப் போற்றப்படுகின்றார். காரணம் சிவனிடத்தில் இருந்து தமிழ் மருத்துவத்தை உலகுக்கு அளித்தவர் சிவபெருமான் எனச் சித்த மருத்துவ வரலாறு கூறுகின்றது. திருமூலர் சிவனை நந்தி என்று தனது பாடல்களில் குறிப்பிட்டு அவரிடமிருந்து மருத்துவத்தைக் கற்றதாகக் குறிப்பிடுகின்றார். மருத்துவம் தொடர்பான பாடல்களிலும் தனக்கு மருத்துவத்தைப் போதித்தது நந்தி என தனது கர்ப்ப வாகடத்திரட்டு என்னும் நூலில் பின்வருமாறு குறித்து நிற்கின்றார்.

"உற்றவியாதி உறுதியாம் என் நந்தி" – பாடல் 14
"துறையான எல்லாம் சொன்னாரே என் நந்தி" – பாடல் 94
"என்நந்தி வன்மையாம் நோய் குன்மம்" – பாடல் 94
"நந்தி உரைத்தது நலமான கர்ப்பத்தில்" – பாடல் 102

மருத்துவம் கற்றது தொடர்பில் பிறிதொரு வரலாறும் உண்டு. சிவனிடம் இருந்து உமாதேவியாரும், உமாதேவியாரிடம் இருந்து பதினெண் சித்தர்களில் ஒருவரான நந்திதேவரும், நந்திதேவரிடம் இருந்து திருமூலரும் மருத்துவத்தைக் கற்றுக்கொண்டனர் என்கின்ற வரலாறும் உண்டு.

இதனடிப்படையிலேயே சித்தர் வணக்கப் பாடல் ஆனது "பார்த்திடவே நந்தீசர் மூலத் தீசர் பண்பான அகத்தீசர்...." என்று ஆரம்பம் அமைகின்றது.

பல்வேறு சித்தமருத்துவ நூல்கள் திருமூலரின் வைத்திய ஏடுகளில் இருந்து தொகுக்கப்பட்ட நூல்களாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, திருமூலர் வைத்தியகாவியம் 1000, திருமூலர் கருக்கிடை வைத்தியம் 600, திருமூலர் வைத்தியம், திருமூலர் வைத்தியச் சுருக்கம் 200, திருமூலர் 8000, திருமூலர் கர்ப்ப வாகடத் திரட்டு .....

இங்கு திருமூலர் ஒருவரல்ல பலர் இருந்துள்ளனர் என்று கருதுவோரும் உள். ஆனால் திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார் என்று சேக்கிழார் பெருமான் தனது பெரிய புராணத்தில் திருமூலர் நாயனார் புராணத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

முன்னிய அப் பொருள் மாலைத்
தமிழ் மூவாயிரம் சாத்தி
மன்னிய மூவாயிரத்து ஆண்டு
இப்புவிமேல் மகிழ்ந்து இருந்து
சென்னி மதி அணிந்தார் தம்
திருவருளால் திருக் கயிலை
தன்னில் அணைந்து ஒரு காலும்
பிரியாமைத் தாள் அடைந்தார்.

திருமூலர் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்திடக் காரணம் திருமூலர் பெற்ற ஞானமே ஆகும். இதனை திருமூலர் மூவாயிரத்தில் உள்ள பாடல்கள் இவ்வாறு எடுத்தியம்புகின்றன.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்
றுடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே"
பாடல் 725, மூன்றாம் தந்திரம்

அழிதற்குரிய இவ்வுடம்பினை நான் இழுக்கென்று நினைத்திருந்தேன். ஆனால் இவ்வுடம்பினுக்குள்ளே உத்தமன் சிவன் உடலினைக் கோயிலாகக் கொண்டு குடிகொண்டுள்ளான் என்று கண்டு கொண்டதினால் உத்தமன் கோயில் கொண்ட உடலினை நான் நன்றாக வைத்திருக்கின்றேன்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"
பாடல் 725, மூன்றாம் தந்திரம்

நீண்ட ஆயுளைக் கொண்ட உடலானது அழிவடையின் அவ்வுடலில் உள்ள உயிரும் அவ்வுடலில் இருந்து அழிந்துவிடும். இதனால் உண்மையான மெய்ஞ்ஞானத்தை இறைவனை அடைய முடியாதுபோகும் அந்த உயிருக்கு. எனவே உடலினை நன்கு பாதுகாக்கும் உபாயங்களைக் கண்டுகொண்டேன். இதன்மூலம் உடம்பை நன்கு பேணி நீண்ட ஆயுள் பெற்று இறைவனை அடைவேன்.

இதனால்தான் திருமூலர் 3000 வருடங்கள் வாழ்ந்துள்ளார். எனவே உடம்பினை அழியாது பாதுகாக்கவும், நோயணுகாது பாதுகாக்கவும், ஏற்பட்ட நோய்களைக் குணமாக்கவும் பல வழிமுறைகளைக் கூறிச்சென்றுள்ளார். இவற்றுள் இயமம், நியமம் என்பனவற்றில் உள நலத்தையும், யோக ஆசனங்களின் வாயிலாக உடலுக்குத் தேவையான உறுதியையும் உடல் நலத்தையும், பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சியின் ஊடாக உடல் உயிர்வாழ்வதற்குத் தேவையான பிராணவாயுவான ஒட்சிசனையும் பெற்றுக்கொள்வது குறித்து அட்டாங்க யோகங்களின் ஊடாகக் கூறியுள்ளார்.

உணவு தொடர்பில் பல்வேறு விடயங்களை திருமூலர் கூறியுள்ளார். உணவாதி செயல்களைக் கட்டுப்படுத்தினால் உணவே மருந்தாகும் என்பது திருமூலர் கருத்தாகும். இதனையே கீழ்வரும் திருமந்திரம் வலியுறுத்துகின்றது.

"அண்டஞ் சுருங்கில் அதற்கோர ழிவில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கருத்தநற் கபாலியு மாமே"
பாடல் 735, மூன்றாம் தந்திரம்

தாம்பத்திய உறவு குறைந்திடின் உடலுக்கு அழிவில்லை. உடல் விரதத்தினால் குறைந்திடின் உயிர் நிலைபெறும், உணவு சுருங்கில் உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கும். இவற்றின் மூலம் கழுத்தினில் கறுப்பினைக் கொண்ட சிவபெருமானை அடையலாம். அதாவது ஆத்மா பேரின்ப நிலையை அடையலாம் என்கின்றார்.

திருமூலரது வைத்திய நூலான கர்ப்ப வாகடத் திரட்டிலும் உணவு தொடர்பில் வலியுறுத்துகின்றார்.

"மேவிய அன்னத்தால் விளங்கிய இச்சடம்
பாவயளகொண்டு பழியுறு அன்னந்தானும்
மாவில் பிறந்தது மெய்யுறு நோயாகும்
காவில் இதையெல்லாம் கண்டுகொள்ள அன்னமே"

உணவினாலே உடல் வாழ்கின்றது. உடலால் விரும்பப்பட்ட உணவுகளை அதிகமாகவும் உண்ண நோய்கள் ஏற்படும். இவற்றை அடிக்கடி உண்ண தீங்குகள் அதிகமாகும். இச் செயல்களால் கருவிலேயே நோய்கள் உருவாகும். எனவே இவற்றைக் கவனத்திற்கொண்டு உணவை உட்கொள் பெண்ணே என்கின்றார் திருமூலர்.

இங்கு உணவு தொடர்பில், வளமான சமுதாயம் உருவாக கர்ப்பகாலத்திலேயே கவனமெடுக்க வேண்டும் என்று பெண்களுக்குக் கூறுகின்றார்.

"காணுமே மந்தங்கள் பலிக்கும் அன்னத்தால்
காணுமே மந்தம் கடுமாங்கிசம் மீறில்
காணுமே மந்தம் கலந்த மாப்பண்டத்தால்
காணுமே மந்தம் கடும் மேதிப் பாலுக்கே"

உணவினை அதிகம் உட்கொள்ளலால் மந்தங்கள் உருவாகி நோய்கள் ஏற்படும். அதிகமாக மாமிசம் உட்கொள்ளல், அதிகமாக மாப்பண்டங்கள் உட்கொள்ளல், சோர்வினைத் தரக்கூடிய எருமைப்பால் அதிகம் உட்கொள்ளல் என்பவற்றுக்கு மந்தங்கள் உருவாகி நோய்கள் ஏற்படும். அன்றைய காலகட்டத்திலேயே அதிகளவு மாப்பண்டங்கள் அதாவது மாப்பொருளானது ஆரோக்கியத்துக்கு கேடு என்று வலியுறுத்தியுள்ளார். இன்று நாம் சீனி, கோதுமை மா என்பவற்றை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தி ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றோம். உணவாதி செயல்கள் எமது தேவையறிந்து அளவோடு பெற்றுக்கொள்ளல் வேண்டும். இதனையே பின்வரும் திருக்குறளும் வலியுறுத்துகின்றது.

"இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்"

ஒருவன் தனக்குத் தேவையான உணவின் அளவின் குறைந்த அளவை உண்ணும்போது அவனிடத்தில் இன்பம் நிலைத்திருக்கும். அதிகளவு உண்பவனிடத்தில் நோய்கள் குடிகொள்ளும். பொதுவாக எமது வாழ்வியலில் நாம் எமது தேவைகள் ஆசைகளை அதிகரிக்கும்போது துன்பங்களைச் சந்தித்துக் கொள்வதோடு உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்து இடைநடுவில் மரணமடைந்து முக்தியைத் தவறவிடுகின்றோம். இதனை விளக்கும் பொது இலக்கியத்தில் உள்ள பாடலும் திருமந்திரப் பாடலும் பின்வருமாறு அமைகின்றன.

நக்கீரரால் பாடப்பெற்ற 141 ஆவது அகநானூற்றுப்பாடலில் 11 - 14 வரிகள் புதுமணத்தம்பதிகளுக்கான உணவுப்பழக்கத்தை இவ்வாறு கூறுகின்றது என "சுவையான சங்ககால தமிழர் சமையல்" என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

"துவரப் புலர்ந்து தூமலர் கஞலித்
தகரம் நாறுந் தண்நறுங் கதுப்பின்
புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ"

திருமணம் முடிந்து புதுவீடு புகுந்த மணமகள் பாலை உலை நீராக வைத்து உணவு சமைத்தாள் என்கிறது இப்பாடல். இங்கு பாலை உலையாக வைத்து ஆக்கும் சோறு பாலுடை அடிசில் அல்லது அடிசில் எனப்படும்.

இங்கு சந்தான விருத்திக்கான சத்துள்ள உணவு உட்கொள்ளலை குறிப்பிடப்படுகின்றது. ஆனால், தொடர்ச்சியாக அதிகளவில் உள்ளெடுக்கும்போது உடலில் கொலஸ்ரோல் அதிகரிக்கின்றது. காரணம் பாலில் கொலஸ்ரோல் குறிப்பிடத்தக்களவு உள்ளது. அதுபோல் அதிகளவு மாப்பண்டமும் உடலில் கொலஸ்ரோலை உருவாகக் காரணமாகின்றன.

இந்த உணவுப்பழக்கம் தொடரும்போது அல்லது அதிகமாகும் போது அது உடலுக்குக் கேடு விளைவித்து இருதயத்தில் அடைப்பை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தும் என்கின்றார் திருமூலர். அதாவது கெட்ட கொழுப்பு இருதயத்தில் அடைப்புக்களை ஏற்படுத்தி மாரடைப்பு ஏற்படுதலைக் குறிப்பிட்டு உடல் விரும்பிய வழியில் செல்லும்போது உடல் அழிவடைவதைக் குறிப்பிடுகின்றார்.

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"
பாடல் 148, முதல் தந்திரம்

திருமணமணம் செய்து, அடிசிலையை உணவாக உண்டு, தாம்பத்தியத்தில் ஈடுபட்டு வந்தவர் இடப்பக்க நெஞ்சு வலிக்கிறது என்று படுத்தவர் இறந்து போனாரே என்கின்றது பாடல். உடல் நிலையாமையைக் குறிக்கும் இப்பாடல் தவறான உணவுப்பழக்கத்தினால் ஏற்படும் அகால மரணத்தைக் குறிப்பிடுகின்றார்.

அட்டாங்க யோகங்களின் முதல் நான்கு நிலைகளான மேற்கூறிய இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமத்தைக் கடைப்பிடித்தால் வாழ்வில் இன்பமாக வாழலாம். அடுத்த நான்கு யோகங்களான பித்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவற்றைக் கைக்கொண்டால் இறை இன்பமாகிய பேரின்ப வாழ்வைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் திருமந்திரம் கூறுகின்றது.

எனவே திருமூலரது திருமந்திரம் கூறும் வாழ்வியல் நெறியில் நின்று ஆன்மீகத்தை அறிந்து இன்பத்தையும் பேரின்பத்தையும் அடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வாழ்வலகுச் சுட்டி பற்றிய கருதுகோளும் தமிழின விடிவுக்கான புதிய அணுகுமுறைகளும்

○ மருத்துவர் சிவநாதன் யமுனாநந்தா

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தால் உலகமயமாதல் வேகமாக மாறிவருகிறது. இதனால் நாடுகளுக்கு இடையே முரண்பாடுகளும் இனங்களுக்கு இடையே முரண்பாடுகளும் அதிகரித்துச் செல்கின்றன.

இவை மனிதகுலத்துக்கு உரித்தான அமைதிக்கு குந்தகமாக பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இனப்படுகொலைகள், இயற்கை வளங்களைச் சூறையாடுதல், சூழல் மாசடைதல் என்பன அவற்றுள் சில. இவற்றினை எதிர்கொள்ள சமூக வாழ்வலகுச் சுட்டிக் கருதுகோள்களை சமூகவியலாளர் கையாளவேண்டிய அவசியம் உள்ளது. சமூக வாழ்வலகுச் சுட்டிக் கருதுகோளினை உலக நாடுகளுக்கு இடையேயும் இனங்களுக்கு இடையேயும் நாடு கடந்த இனங்களுக்கு இடையேயும் பிரயோகிக்கலாம்.

முதனிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் பன்னிரு சமூக வாழ்வியல் காரணிகளை வகைப்படுத்தலாம். அவையாவன

**1. உணவு**
**2. உறைவிடம்**
**3. நீர்**
**4. மின்சாரம்**
**5. போக்குவரத்து**
**6. கல்வி**
**7. தொடர்பாடல்**
**8. மருத்துவம்**
**9. நீதி**
**10. மதவழிபாடு**
**11. பொழுதுபோக்கு**
**12. தொழில்**

அண்மைய காலங்களில் சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் பாதகமான மாற்றங்களை வடபகுதியில் மருத்துவத்திலும் நீதியிலும் ஏற்பட்டமையை நாம் கண்ணுற்றோம். தொழில் புரிதலில் சமூக வாழ்வலகுச் சுட்டியின் பாதகமான நிலையினால் பலர் வெளிநாடுகளுக்கு புலம் பெயரும் நிலையில் உள்ளனர். தொடர்பாடல் தொடர்பான பாதகமான சமூக வாழ்வலகுக் கணியங்கள் மிகவும் வேகமாக சமூக இயக்கத்தினை பாதிக்கின்றன.

இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் மூன்று கணியங்கள் காணப்படுகின்றன அவையாவன

**1. உற்பத்தி**
**2. வர்த்தகம்**
**3. நுகர்வு**

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் சமூக வாழ்வலகு மேனிலையில் இருப்பதற்கு இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுக் கணியங்கள் சிறப்பு நிலையில் இருத்தல் அமைகிறது. இதில் உற்பத்தி என்பதற்குள் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், தொழில்நுட்ப உள்ளீடு, மனிதவள உள்ளீடு என்பன அமைகின்றன. அடுத்து உற்பத்திக்கான வர்த்தகம் பாதகமற்றதாக அமையவேண்டும். இறுதியாக மக்களின் நுகர்வு அவர்களின் உற்பத்தித் திறனுக்கும் வர்த்தகத்திற்கும் இடையில் சமச்சீராக அமைத்தல்வேண்டும். இவை பாதிக்கப்படின் சமூக வாழ்வலகுச் சுட்டி இருதிசைகளிலும் கீழ்நிலையடையும்.

மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியாக நிர்வாகம் அமைகிறது. சமூக வாழ்வலகுச் சுட்டிகளின் முதல் இரு நிலைகளிலும் ஏற்படும் பாதிப்புகள் மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியில் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் நிர்வாகம் சர்வாதிகாரமானதாகவும் வெளிப்படைத் தன்மை இல்லாததாகவும் அமையும். அதாவது முதனிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளில் உருவாகும் முரண்பாடுகள் இரண்டாம் நிலைச் சுட்டிகளில் செல்வாக்குச் செலுத்தும். இவ்வாறே மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியில் செல்வாக்குச்செலுத்தி நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளிலும் செல்வாக்கைச் செலுத்தும்.

நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளாக பின்வரும் கணியங்கள் அமைகின்றன அவையாவன

**1. அரசியல்**
**2. இராணுவம்**
**3. இராஜதந்திரம்**


இலட்சிய நாடுகளில் சமூக வாழ்வலகுச் சுட்டிகள் 100 வீதத்தில் காணப்படும் உலக வல்லரசுகளிடையே இவை 75 வீதமாகக் காணப்படும். இன முரண்பாடுகள் உள்ள நாடுகள் யுத்தமுனைப்பை உடைய நாடுகளில் சமூக வாழ்வலகுச் சுட்டிகள் அனைத்து நிலைகளிலும் தாழ்நிலையிலேயே காணப்படும்.

நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகள் மூன்றாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியிலும் அஃதே இரண்டாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டியிலும் முதலாம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகளிலும் செல்வாக்குச் செலுத்தும்.

ஈழத் தமிழர்களை பொறுத்தவரை நான்காம் நிலை சமூக வாழ்வலகுச் சுட்டிகள் பூஜ்ஜிய மட்டத்துக்கும் 10 வீதத்துக்கும் இடையிலேயே காணப்படுகின்றன. ஈழத் தமிழினத்துக்குரிய சமூக வாழ்வலகுச் சுட்டிகள் மேன்மையுறும் பட்சத்திலேயே தமிழின விடியல் வெளிச்சமாகும். இவ்வாறே உலகில் உள்ள அனைத்துச் சிறுபான்மைச் சமூகத்தின் மேம்பாடும் அமையும்.

அதாவது ஒவ்வொரு இனமும் தனது சமூக இருப்பினைத் தக்கவைக்கவும் உலகமயமாதலினுள் சிதறுண்டு போகாதிருப்பதற்கு அவ்வற்றிக்குரிய சமூக வாழ்வலகுச் சுட்டிகள் உன்னத நிலையில் வைத்திருத்தல் மிகவும் அவசியமானதாகும். ■

கலாபூஷணம் கே.எஸ்.சிவஞானராஜா



# கற்பனை கடந்த அற்புதன்

## அமரர் செ.குமாரசாமி என்னும் சங்கீதத்தின் ஒப்பற்ற ஆளுமை

ஈழத்து இசை வரலாற்றிலே நீண்டதொரு இசைப்பணியாற்றிய பெருங்கலைஞனாக, கற்பனை கடந்த அற்புதக் கலைஞனாக அமரர் சங்கீத பூஷணம் செல்லத்துரை குமாரசாமி பதிவிடப்படுகின்றார். சிறப்பாக, சரீரவளமும், சாத்திர சாகித்திய வளமும், சப்தஸ்வரங்களின் பரோபகார பாக்கியமும், பக்திப்பரவசப் பாங்கும், பயபக்தியான குணாம்சமும். இல்லறநல்லற மாண்பும், இந்த மண் வாஞ்சையும், மண்வாசனையும் நிரம்பிய சங்கீத சாம்ராஜ்ஜியச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த பேராசானே அமரர் குமாரசாமி ஆவார்.

அவர் விரிவுரையாளராகக் கடமையாற்றி, எமது சமூகத்துக்கு எது அவசியமோ அதனை இசையால் வென்றெடுத்த இசைப்பிரமன் இவர். பாடசாலை மாணவர்களுக்கான இசைப்பாடாந்தரங்களை மிக எளிதாகவும் ஜீவாம்சம் குறையாமலும் அட்சரம் பிசகாமலும் ஆற அமர இருந்தேறும் படியாகவும் பலதரம் சிட்சைசெய்கின்ற ஆற்றலும் ஆளுமையும் இவரிடம் போதியளவு இருந்தது. வெற்றிலைக்கேணி, கரவெட்டி, நெல்லியடி, யாக்கரு, கோப்பாய் ஆகியவற்றிலிருந்து பல மாணவர்களை உருவாக்கி வாழவழிகாட்டினார். அவர்கள் இன்று இலங்கையிலும் உலகிலும் நற்பிரஜைகளாக நன்றிபகர்ந்து வாழ்கின்றார்கள். மேலும் கல்பித சங்கீதத்துக்கும் அப்பால் மனோதர்ம சங்கீதமதை மாணவர்கள் விரும்புமாறு கவினுறப் பயிற்சியளித்துள்ளார். இராகம், தானம், பல்லவி, நிரவல், கற்பனாஸ்வரம் ஆகியவற்றில் அடடா மிகப்பிரம்மாதமாக ஆட்சிசெய்வதில் வல்ல அதேவேளை சபையோருக்கு விழங்குவதிலும் பலே கெட்டிக்காரர். 1987ஆம் ஆண்டு அளவெட்டியில் நடைபெற்ற இசையரங்கின் அமரர் குமாரசாமியின் பிரதான உருப்படியாக ஹரஹர ப்பரியா இராக, கண்டதிரிபுடை தாள அனாகத எடுப்பில் அமைந்த பல்லவியைப்பாடி இரசிகர்களின் பலத்த கரகோஷத்தைத் தமதாக்கிக் கொண்டார். அத்துடன் அனுலோமம் பிரதிலோமம் இரண்டுக்குமான செயன்முறை விளக்கங்களும் வெகுசிறப்பாக அரங்கேற்றி வெற்றி கண்டார். பல்லவி குமார் என்ற விசேட பெயரும் உண்டு. மேலும் அதே பல்லவியில் இராகமாலிகா ஸ்வரங்களை கற்பனா ஸ்வரங்களாக்கினார். மதுவந்தி, ஹிந்தோளம், காபி, ஹம்சானந்தி, பிருந்தாவனசாரங்கா ஆகிய இராகங்களினால் பல்லவியை இரசிகர்களின் வசமாக்கினார். இவ்வாறானதொரு அருமையான இசையரங்கை யாம் எங்கும் அனுபவித்ததில்லை.

சுமார் ஆயிரம் இசைக்கச்சேரிகளுக்கு மேல் ஆட்சி செய்து வெற்றி கண்ட ஒரு சங்கீத பிதாமகராவார். அதைவிட இலங்கையிலுள்ள முன்னூறுக்கும் மேற்பட்ட திருத்தலங்கள் மீது பக்திரசம் சொட்டும் கீர்த்தனைகளைப் பாடி ஊர்களைப் பேறாக்கியுள்ளார். நல்ல தவப் பேறிதுவாகும். ஈழத்திலே ஒரு சீர்காழி என்ற பெருமையோடு கோவிந்தராஜனைப் போல அச்சொட்டாகப் பாடுகின்ற பெரும் புகழை எமக்கு நன்கொடையாக்கித் தாமும் மகிழ்ந்தார். அத்துடன் மண் மகிழவும் கண் பூக்கவும் பண்பெருகவும் வாய்ப்பளித்து, வரலாற்றில் பங்காற்றினார். விடியவிடிய விளக்குகளை எரியச் செய்து கொடிய இருளைப் போக்கினார். பூக்காத கொடிகளுக்கு மொட்டாகினார். விளையாத பூமிகளுக்குப் பயிராக்கினார். வானம் பார்த்த பூமிகளுக்கு முகிலாகி மழையாகினார். குரலுக்கும் விரலுக்கும் சுருதி லயமானார்.

இவர் அடிக்கடி சங்கீதபூஷண சங்கீத வித்துவான்கள், விரிவுரையாளர்களை நினைவு கூர்ந்து, புளகாங்கிதம் அடைவார். அமரர் இசைமேதைகளான கணபதிப்பிள்ளை, செல்லத்துரை, கருணாகரன், சண்முகரத்தினம், ஜயாக்கண்ணு தேசிகர், பரம் தில்லைராஜா, தர்மபூபதி, ஞானகுமாரி, சுபாஷ்சந்திரன், திலகேஸ்வரன், வால்நடராஜா, உருத்திரன், வர்ணகுலசிங்கம், ராம்குமாரசாமி, இராதகிருஷ்ணன், சின்னராசா போன்றவர்களை வணங்கிடுவார்.

மேலும் பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடி மகிழ்கின்றவாறு பல தியாகராஜ உற்சவங்களைச் சிறப்பித்து முன்மாதியாக்கியமை என்றென்றும் நெஞ்சை விட்டகலாத பசுமை நினைவுகளாகும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், பன்னிரு திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு கனிந்து நெக்குருகிப் பாடுவார். கைராசியான கர்நாடக சங்கீதவரங்களை பிள்ளைகளாக்கியவர். வடமராட்சி கணித விஞ்ஞான மேதைகளை மட்டுமல்ல கலைஞர்களையும் மேதையாக்கியமை அமரர் குமாரசாமியின் புலமையிலிருந்து புரிந்து கொள்ளமுடிகிறது. மூளைகளின் சாம்ராஜ்ஜியமான வடமராட்சியின் தவப் புதல்வன், தங்கமகன், இசைப் பிரம்மன், குரலிசை வல்லோன், சங்கீத பூஷணம், இசைமேதை, யாழ்முத்து, கலைக்குரிசில், கலைவாரிதி, புரட்சிப் பாடகர், இசைஞானி போன்ற பல விருதுகளைச் சுமக்கின்ற பாக்கியத்தோடு விண்ணுலக அரசமாளிகையில் உன்னத பேறுகொண்டார். அவரது பயணம் தொடர்வதாக.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுக் கட்டுமானத்தில் சாதிக்கும் பெண்கள்!





த.றஜிந்தினி
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்


வடமாகாணத்தின் பிரதான ஜீவனோபாயங்களில் ஒன்றாகவுள்ள கடற்றொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் படகுகளில், நூற்றுக்கணக்கானவை பெண்களின் தொழில்நுட்ப அறிவைக்கொண்டு, பெண்களாலேயே வடிவமைத்துச் செய்யப்பட்டவை என்றால் அதை உங்களால் நம்ப முடிகின்றதா. 'அசாத்தியம்' போன்று தோன்றும் இந்த விடயத்தை மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றது அஜஸ்மின் இன்டஸ்ரியல்.

முன்னொரு காலமிருந்தது. வடமாகாண மீனவர்கள் படகுகளைப் புதிதாகக் கட்டவேண்டுமாயின் தம் எண்ணம்போல் நிறங்களில் வடிவமைக்க வேண்டுமாயின் நீர்கொழும்பு, கொழும்பு போன்ற பகுதிகளில் இயங்கும் நிறுவனங்களில் பிரத்தியேக விண்ணப்பங்களை மேற்கொண்டே இதைச் சாத்தியப்படுத்தலாம். இவ்வாறு கட்டமைக்கப்படும் படகுகளை வடக்குக்குக் கொண்டுவருவதற்கு ஏராளம் பணச்செலவு - பொருட்செலவு என்பன ஏற்பட்டன. சிலவேளையில் சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம் என்பதாக இந்த காவுகைச் செலவுகள் அமைந்ததுண்டு. இந்தக் குறைகளையெல்லாம் இன்று நிவர்த்தித்துக் கொண்டிருக்கின்றது அஜஸ்மின் இன்டஸ்ரியல்.

தேவகுமார் என்பவரின் தலைமையில் பாஷையூரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்தில் இன்று ஏராளம் பெண்கள் முதன்மைத் தொழிலாளிகளாக உள்ளனர். அவர்களே படகுகளை வடிவமைக்கின்றனர் முன்னிலைச் செயற்பாட்டாளர்களாக இயங்குகின்றனர். இங்கு உருவாக்கப்படும் படகுகள் தரமானவையாகவும் உறுதியானவையாகவும் இருப்பதுடன் நீடித்த பாவனையையும் கொண்டமைந்துள்ளன. இந்த நிறுவனத்தின் சேவையால் இன்று மீனவர்களின் ஏகப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. பொருட்செலவு மீதப்படுத்தப்பட்டுள்ளது. நேரவிரயம், போக்குவரத்துச் செலவு என்பன மீதமாக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த நிறுவனத்தை மேலும் வினைத்திறன் கொண்டதாக மாற்றுவதன் மூலம், துறைசார் நிறுவனங்களை உருவாக்குவதன் மூலமும் படகுக் கட்டுமானத்தை வடக்கை நோக்கி இலகுவில் நகர்த்தி வரலாம். அரசாங்கம் வடக்கை மையப்படுத்தி மீன்பிடித்துறை அபிவிருத்தி செய்யப்படும் என்று கூறிவரும் இக்காலத்தில் மீன்பிடிக் கட்டுமானங்கள் சார்ந்த நிறுவனங்களையும் இங்கு பலப்படுத்தினாலேயே தடையின்றிய - சீரான அபிவிருத்தியை (மீன்பிடித்துறையில்) இங்கு எதிர்பார்க்கலாம். இதற்கு அஜஸ்மின் இன்டஸ்ரியல் ஓர் உதாரணம்.

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு.
அனுப்ப வேண்டிய முகவரி:
புதன்பொய்கை உதயன்,
361.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி:
puthanpoigai@gmail.com

# உணவே மருந்தா? மருந்தே உணவா?



ரக்சனா



காலஓட்டத்தில் மனிதன் பரிணாம வளர்ச்சி அடைய அடைய அவனது வாழ்க்கை முறையும் அவன் முகங்கொடுக்கும் ஆரோக்கியம் சார்ந்த சவால்களும் மாறிக்கொண்டே வருகின்றன. விரும்பியோ விரும்பாமலோ எமது ஆரோக்கியத்துக்கு குந்தகம் விளைவிக்கும் பல்வேறுபட்ட நடைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் புறக்கணிக்க இயலாத சூழ்நிலையில் மனித சமுதாயம் அகப்பட்டுச் சிக்கித் தவிக்கிறது.

ஒரு மனிதனின் ஆரோக்கியம் அவனது சுய நலன்களை மட்டும் உள்ளடக்கியதல்ல. இலங்கை போன்றதொரு நாட்டில் ஒரு தனிமனிதனது ஆரோக்கியம் அவனது சுயத்தைத் தாண்டி அவனைச் சூழ உள்ள ஓர் பெரும் குடும்பத்தின் சுகதுக்கங்களையும் பெரியளவில் பாதிக்கும் வலிமை கொண்டது. இன்றைக்கு சாதாரணமாக மருத்துவமனையில் நோயாளர் பார்வைநேரத்தில் அங்கு வந்து குவியும் உறவினர்களின் படலமே அதற்கு தெளிவான சான்று. உறவு என்கின்ற ஆழமான பிணைப்புக்கும் இந்த ஆரோக்கியம் என்கின்ற நிலைக்கும் பிரிக்கமுடியாத ஓர் பெரும் தொடர்பு இருப்பதை, ஆரோக்கியம் குன்றிப்போகும் வேளையிலேயே அதிகம் உணர முடிகிறது.

மருத்துவ உலகம் இமாலய வளர்ச்சி கண்டுள்ள இந்தக்காலகட்டத்தில், புதியபுதிய நோய்களின் அறிமுகமும் அதற்கான மருத்துவ வழிமுறைகளும் வீட்டிலுள்ள ஐந்து வயதுக் குழந்தைகள் முதல் அறுபது தாண்டிய முதியோர்கள் வரை அனைவரும் அறிந்ததாகவே உள்ளது. மருத்துவ வளர்ச்சியோடு சேர்ந்து நோய்களும் அதிகரித்துவிட்டதாய் மட்டும் இதற்கு அர்த்தம் கற்பிக்க இயலாது. மருத்துவ வளர்ச்சி அற்ற காலகட்டத்தில் இவ்வாறான பல நோய்களின் விளைவுகளறியாது காய்ச்சல், சிறு நோய்களென மரணங்கள் சம்பவித்தவண்ணமே இருந்திருக்கின்றன. அன்று மக்கள் மருத்துவ வசதிகளின்றி நோய்வந்த மாத்திரத்திலேயே மரணத்தைத் தழுவியிருந்தாலும் இன்று மருத்துவ வசதியோடு எஞ்சிய காலங்களை நோயாளிகளாகக் கழிக்கின்றனர் என்றால் மிகையில்லை. இருந்தும் கால ஓட்டத்தில் நோய்களின் தன்மையும் தோற்றமும் அதிகரித்தவண்ணமே இருக்கின்றதென்னும் உண்மையையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது.

தொண்ணூறு வயது தாண்டிய வயோதிபர் இறக்கும்வரை தமக்கெனத் தனிக் குடிசை, தனது சமையல் தனது வீடென்று தாமாக இயங்கி கடைசி நொடிவரை தடியினுதவியோடு நடந்து கண்ணாடிகூட பாவிக்காமல் வாழ்ந்து மடிந்ததை எம்மில் அநேகர் கண்டிருக்கிறோம். இன்று அவ்வாறான முதியவர்களைக் காண்பது மிக அரிது. அவர்களுக்கு என்ன நேர்ந்தது? அந்த பரம்பரை இன்று எங்கே போனது?

நாற்பது வயதில் நீரிழிவு, சர்க்கரை வியாதி, உயர் குருதி அழுத்தம் இவையனைத்தில் ஏதேனும் ஒன்று எமக்கு 'ஹலோ' சொல்லி ஒட்டிக்கொள்கிறது. அதன்பிறகு ஆயுள் முடியும்வரை சாப்பாட்டில் ஆயிரத்தெட்டு பேணுதல், அதனோடு சேர்த்து சாப்பாட்டுக்கு முன், சாப்பாட்டுக்குப் பின் என மருத்துவக் குறிப்புகள், மாதாமாதம் கிளினிக் என்று வரிசையில் காத்திருப்பு இப்படியே அனேகரது வாழ்க்கை ஓடிக்கொண்டு இருக்கிறது.

## தவறவிடப்பட்டிருக்கும் தலைமுறைத் தொடர்பு

அன்று பேரன் பேத்திமாரின் நல்லது கெட்டது காண்பதற்கும் பூட்டன்மார் பூட்டிமார் உயிரோடு இருந்தனர். இன்று தான் பெற்ற பிள்ளையின் பிள்ளையைப் பார்க்கக்கூடப் கொடுத்துவைக்காத ஆயிரக்கணக்கான பெற்றோரை நாம் காண்கின்றோம். இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, கல்வி, பொருளாதாரம், பெயர், புகழ் என பல்வேறு தேவைகளுக்காய் திருமணம் என்ற சடங்கு இன்று பிற்போடப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதனால் பிள்ளைகள் திருமண வயதை அடைவதற்கு முன்னர் பெற்றோர் இறந்துவிடுகின்றனர். இல்லாவிடில் கடும் நோய்நிலையுடன் வாழவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால், ஒரு நூற்றாண்டு காலத்தில் குறைந்தது மூன்று தொடக்கம் நான்கு தலைமுறை இருந்த காலம் கடந்து, இன்று ஒரு நூற்றாண்டு காலத்தில் அதிகபட்சம் இரண்டே இரண்டு தலைமுறைகள் இரு வேறுபட்ட காலப்பகுதியில் தனித்து வாழவேண்டிய நிலையில் இருக்கிறது. அதன் பக்கவிளைவாக தாத்தா பாட்டிமார் இல்லாத குடும்ப கட்டமைப்புக்குள் நாம் புகுந்துகொண்டிருக்கிறோம்.

இரண்டாவது, எமது உணவுப் பழக்கவழக்கங்கள். இன்றைய காலங்களில் எந்தவிதமான அவதானமுமின்றி அளவுக்கு மிஞ்சி அமுதுண்ணும் பழக்கத்துக்கு ஒவ்வொருவரும் அடிமையாகிக்கொண்டிருக்கின்றனர். கீரைகளும் மரக்கறிகளும் சேதனம் அசேதனம் என லேபல்களுடன் பகிரங்கமாகவே விற்கப்படுகின்றன. தெரிந்தே பூச்சிநாசினிகளை காசுகொடுத்து வாங்கி உண்கிறோம். கூடவே, புகைத்தல், மது இப்படி போதைப்பொருள்களுக்கும் அடிமையாகி எமது ஆயுட்காலத்தை இன்னும் குறைத்துக்கொள்கிறோம்.

இலங்கை மக்கள் குறைபோஷணையாலும் நீரிழிவாலும், உயர் குருதியமுத்தத்தினாலும் பாதிக்கப்படுகின்றனர் என்ற எச்சரிக்கை பகிரங்கமாக விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இருதய நோயால் மாத்திரம் வருடந்தோறும் சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமான நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர். நாளொன்றுக்கு சராசரியாக 20 பேருக்கு மேல் இருதய நோயால் உயிரிழக்கின்றனர். இவ்வாறு நோய்களின் தாக்கமும், அதனால் ஏற்படுகின்ற விளைவுகளும் இத்துணை தீவிரமாக இருக்கின்ற வேளையில் நாம் ஒவ்வொருவரும் சற்று நிதானமாக சிந்தித்து செயற்படவேண்டும். எமது குடும்பம், உறவுகள், சமுதாயம் என அனைவரது நலனுக்காகவும் நல்வாழ்வுக்காகவும் சிறந்த வாழ்க்கை முறையையும் ஒழுக்கங்களையும் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீட்டைத் தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்கோம்

## பெரமுன தெரிவிப்பு

பாதீட்டைத் தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் பொதுஜன பெரமுனவிடம் இல்லை என்று அந்தக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதால் பாதீட்டை எதிர்த்து தமது எதிர்ப்பை பெரமுன வெளிப்படுத்தும் எனத் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையிலேயே எஸ்.பி.திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் எவ்வாறு வாக்களிக்கவேண்டும் என்பது குறித்து கட்சி இன்னும் ஆராயவில்லை. பாதீட்டை தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணமும் எம்மிடம் இல்லை. கட்சிக்குள் எமது யோசனைகள் முன் வைக்கப்படும், அதன் அடிப்படையில் கட்சி எடுக்கும் முடிவின் அடிப்படையில் நாம் செயற்படுவோம். கட்சியின் முடிவுக்குக் கட்டுப்படாவிட்டால் வெளியேறவேண்டும்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் பெரமுனவில் இருந்து வெளியேறிய அணிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை. அடுத்த தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கூட அந்தத் தரப்புகளால் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. பிரதான கட்சிகளில்தான் தேர்தலுக்கு வர மேற்படி கட்சிகள் முற்படும்.

ஜே.வி.பி. பக்கம் முழுமையாக மக்கள் அலை இல்லை. ஜே.வி.பி.யின் வாக்குவீதம் அதிகரித்துள்ளது உண்மைதான். அதாவது 2 வீதமாக இருந்தது 12 வீதமாகலாம். அதே போல பெரமுனவுக்கான மக்கள் ஆதரவும் அப்படியே தொடர்கின்றது' - என்றார். (அ-ம-44)



பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட முகமாலை சிகரம் சிறுவர் கழகத்தின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் கடந்தவாரம் முகமாலையில் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்றன. பச்சிலைப் பள்ளி பிரதேசசெயலகத்தின் சிறுவர் பிரிவின் ஏற்பாட்டில், 'ஏழ்மைக்கு கைகொடுக்கும் உறவுகள்' அமைப்பின் நிதி அனுசரணையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ச-9)

### ஆசிரியர்கள்...

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை வழங்கு, இலவசக் கல்வியை உறுதிப்படுத்து, கல்விக்கு 6 வீத ஒதுக்கீட்டை வழங்கு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பத்தரமுல்ல, புத்ததாச மைதானத்தில் இருந்து நடை பயணத்தை அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க அமைப்பினர் முன்னெடுத்தனர். கல்வி அமைச்சை நோக்கியே அவர்கள் சென்றுகொண்டிருந்தனர். எனினும், அவர்களை இடையில் வைத்து பொலிஸார் மறித்தனர். முன்னோக்கிச் செல்வதற்குத் தடை ஏற்படுத்தினர். இதனால் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. இதனையடுத்து நீர்த்தாரைப் பிரயோகமும், கண்ணீர்புகைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. கலகமடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும், தடைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு அதிபர், ஆசிரியர்கள் கல்வி அமைச்சுக்கு முன்னால் சென்றனர். பின்னர் கல்வி அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்துவதற்கு 10 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. எதிர்வரும் 13ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் தமக்குத் தீர்வு அவசியம் என வலியுறுத்திவிட்டு, ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (அ-ம-44)

### மயங்கிச்...

சல்லியாவத்தை, பொலிகண்டி தெற்கைச் சேர்ந்த ஜெயேந்திரன் சோதிமலர் (வயது - 67) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

### விபத்தில்...

படுகாயமடைந்தார். பருத்தித்துறை மந்திகை மருத்துவமனைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்துக்குள்ளானவரின் கால் எலும்பு முறிந்த நிலையில், அவர் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-9)

### தாதியரின்...

வழங்கிய உத்தரவில், ஏற்கனவே ஓய்வுபெற்றவர்களையும், அந்தந்தப் பதவிகளில் மீண்டும் பணியில் அமர்த்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

### டிப்பர்...

சிங்கம் மகேஸ்வரி (வயது-72) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நீர்வேலி, இராசவீதி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் பொங்கல் நிகழ்வில், நேற்றுமாலை அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் எதிரே நிறுத்தி வைக்கப்பட்ட வாகனத்தின் மீது டிப்பர் வாகனம் மோதியதில் இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது. விபத்துத் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய 30 வயதான டிப்பர் சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ம-26)

### காணாமற்போன...

பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளையடுத்து, சந்தேகநபர் கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் திருமணம் முடித்த அவர்கள் தனித்து வாழ்ந்து வந்துள்ளனர். கொல்லப்பட்டவரின் தாயார் தனது மகளுடன் அவ்வப்போது அலைபேசியில் உரையாடி வந்துள்ளார். எனினும் கடந்த 21ஆம் திகதிக்குப் பின்னர் தன்னுடைய மகளைத் தொடர்பு கொள்ள முடியாததையடுத்து அவர் தனது மகளும், அவருடைய கணவனும் வசித்துவந்த வீட்டுக்குச் சென்று பார்த்துள்ளார். வீடு பூட்டப்பட்டு இருந்துள்ளது. வீட்டின் பின்பக்கத்தில் புதிதாக வெட்டப்பட்டு மூடப்பட்ட குழியொன்று இருந்துள்ளது. இதையடுத்து ஏதோ அசம்பாவிதம் நடந்துள்ளது என்பதை உணர்ந்துகொண்ட தாயார், இது தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸாரிடம் முறையிட்டிருந்தார். பொலிஸார் துரிதகதியில் செயற்பட்டு இறந்த பெண்ணின் கணவனை கொழும்பில் வைத்துக் கைது செய்துள்ளனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், அந்தநபர் தன் மனைவியைக் கொன்று வீட்டுக்குப் பின்பாக புதைத்துள்ளமை முதற்கட்டமாகத் தெரியவந்துள்ளது. நீதிமன்ற அனுமதியுடன் குறித்த பெண் கொன்று புதைக்கப்பட்டதாக நம்பப்படும் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-213)

### கூட்டமைப்பின்...

அரசியல் இருப்பை தக்கவைக்க தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார். இதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் துணை நிற்கின்றார்' என்று அம்பிட்டிய சுமண ரதன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பில் வாழும் சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் சாணக்கியன் நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். திவுலபதான பகுதியில் உள்ள விவசாயிகளை அங்கிருந்து விரட்டுவதற்கு முற்படுகின்றார். எமது அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. எனவே தான் எமக்கு நீதிகோரி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். பொலிஸ்மா அதிபரிடம் முறையிடவும் உத்தேசித்துள்ளோம்.

சிங்கள மக்களின் விவசாய நிலத்தை, மாடுகளுக்காக சாணக்கியன் கோருகின்றார். தமிழ் டயஸ்போராக்களால் வழிநடத்தப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு - கிழக்கில் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளவே சாணக்கியன் முயற்சிக்கின்றார். மாறாக இது அப்பாவி தமிழ், சிங்கள மக்களுக்கிடையிலான பிரச்சினை அல்ல.

சிங்கள மக்கள் அவர்களுக்குரிய பாரம்பரிய இடத்தில் விவசாயம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும். விகாரை அமைப்பதற்குத் தடை ஏற்படுத்தப்படுகின்றது. இதனை நாம் சுட்டிக்காட்டினால் இனவாத முத்திரை குத்துகின்றனர். இராசமாணிக்கம் என்பவர் புலிகள் அமைப்பில் இருந்த ஒரு தலைவர். அவரின் மகன் தான் சாணக்கியன். நாட்டுக்குள் மீண்டும் தீ மூட்டும் வகையிலான செயல்களையே அவர் செய்துவருகின்றார்.

நாம் மோதலை விரும்பவில்லை. இனவாதத்தைத் தூண்டவும் முற்படவில்லை. இது அரசியல் 'கேம்' என்பது எமக்குத் தெரியும். வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியைக் கைப்பற்றுவதே சாணக்கியனின் இலக்கு. ஆனால், அவர் மக்கள் மத்தியில் 'பெயில்'. அவர் மக்களுக்கு சேவை செய்வதில்லை. அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சார்பாக சாணக்கியனுடன் இணைந்து சூழ்ச்சிகரமான திட்டங்களை கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் செயற்படுத்திவருகின்றார். அவருக்கும் மக்கள் ஆதரவு இல்லை' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பண்பாட்டுவிழா முன்னாயத்தங்கள் ஆராய்வு!

கிளிநொச்சி, ஒக்.25
கிளிநொச்சியின் நடப்பாண்டுக்கான பண்பாட்டுப்பெரு விழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச் செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி நிலையத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்ட துடன் அதற்கான ஆயத்தங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.
விழா அரங்கத்துக்கான பெயர், விழாவுக்கான விருந்தினர்கள், நிகழ்ச்சி நிரல் ஒழுங்கமைப்பு, நிதித் தேவைகள், கலைஞர் கௌரவிப்பு ஏற்பாடுகள், கலைநிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலதிக மாவட்டச் செயலர், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலக உதவிப் பிரதேசசெயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ச-20)



தொல்புரம் சர்வோதயத்தில் 40 வருடங்களாக புனரமைக்கப்படாதிருந்த பொதுக்கிணறு மக்களின் அன்றாட குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் முகமாக பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி உப தலைவருமான சண்முகநாதன் ஜெயந்தனின் முயற்சியில் புனரமைத்துக் கொடுக்கப்பட்டது. (ச-125)

## சித்திரக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்!



யாழ்ப்பாணம், ஒக்.25
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுச் சுன்னாகம் பொதுநூலகம் உடுவில் பிரதேச கலாசார மத்திய நிலையத்துடன் இணைந்து நடத்திய கண்கவர் சித்திரக் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை பிரதம நூலகர் திருமதி.ஜெயலட்சுமி சுதர்சன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.
நிகழ்வில் சுன்னாகம் பொதுநூலகத்தில் நடத்தப்பட்ட இலவச சித்திர வகுப்புகளில் முழுமையாகக் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ச-66)

09 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
V2 Travels
0768226244
0768226241

# குப்பிழான் சிவபூமியில் சிறப்புற்ற வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 25
குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் வாணி விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஆச்சிரமத்தின் சிவபூமி அரங்கில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் சிறப்புரையை அதிபர் நா.விஜயசுந்தரம், ஆசியுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத்தலைவர் சிவஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா ஆகியோர் ஆற்றினார்.
குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரம அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வேப்பிலைநடனம், கண்ணன் நடனம், நாதஸ்வர சக்கரவர்த்தி ஈழநல்லூர் பி.எஸ்.பாலமுருகன் குழுவினரின் விசேட நாதஸ்வர தவில் கச்சேரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனின் பண்ணிசைக் கச்சேரி என்பவை நிகழ்வில் சிறப்புற்றன. (ச- 66)

**பணிப்பெண் தேவை**
நல்லூரில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு:
077 072 6661
070 672 6661

**களஞ்சியம் (Store) தேவை**
யாழ். நகரை அண்மித்த பகுதியில் 1500 - 2000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட களஞ்சியசாலை தேவை.
தொடர்பு: 077 277 7779

**முகாமையாளர் தேவை**
யாழில் சைவ உணவகம் ஒன்றிற்கு அனுபவம், மொழியாற்றலுடன் கூடிய 40-50 வயதுக்குட்பட்ட முகாமையாளர் ஒருவர் தேவை.
அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடியவர்களுக்கு நல்ல சம்பளம் முன்னேற்றம்
தொடர்பு:
077 3611 301, 0777 112 269

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தாயின் மடியில் 30.10.1939
இறைவன் பாதத்தில் 26.09.2023

கடந்த 26.09.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**திரு. சரவணமுத்து ஆறுமுகநாதன்**
அவர்களின்
அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (26.10.2023) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

**ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வுகள் 30.10.2023 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்** நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பழை.
இங்ஙனம் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 26 . 07 . 1982
உதிர்வு 23 . 10 . 2023



**திருமதி பிரியதர்ஷினி நரேந்திரன்**

புளியங்கூடலை சொந்த இடமாகவும் ஆறுகால்மடம் புது வீதியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரியதர்ஷினி நரேந்திரன் அவர்கள் கடந்த (23.10.2023) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.
அன்னார் நரேந்திரன் (லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும், நாகேஸ்வரன் சந்திரமதி தம்பதியரின் அருமை மகளும், கணேசலிங்கம் தவமணிதேவி தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற செல்லத்தம்பி மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை இராஜேஸ்வரி தம்பதியரின் பேர்த்தியும் மற்றும் வானதி (சுவிஸ்), சாஜிதா (ஜேர்மனி), ஜனார்த்தனன் (ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுரேந்திரன், அருணன், மயூரன், சசிகரன் (பவன்-சுவிஸ்), அம்பிகன் (ஜேர்மன்), கோகிலா ஆகியோரின் மைத்துனியும், விசாகன், வாகீசன், சாரங்கா, அபிராமியின் சித்தியும், அஸ்விதா, ஆருஜன், ஆதிசன், ஆயுஸ்மன், அஜேஸ், யூலியன், யூலியா, சொபியா ஆகியோரின் பெரியம்மாவும், அதுஜன், அபிக்ஷா, அகிரனின் செல்ல அத்தையும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் 26.10.2023 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை அவரின் ஆறுகால்மட இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
தகவல்: குடும்பத்தினர்.
(CS 267111A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.